

# தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரியின் பிரதிபலிப்புக்கள்

மொஹான் பண்டிதகே

நாட்டின் கடினமான சூழ்நிலைகளுக்கு மத்தியில், சாதகமான சமூக, பொருளாதார மாற்றங்களை ஏற்படுத்துவதற்கான ஒரு வினையூக்கியாக உருவெடுத்து, அதன் செயற்பாடுகளைத் தொடர்ந்து முன்னெடுப்பதற்காகவும், வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துவதற்காகவும், வாழ்வாதாரத்தை உறுதிப்படுத்துவதற்காகவும், ஹேலீஸ் குழுமம், தனது, அனைத்துச் சவால்களையும் ஒன்றிணைத்து உச்சக்கட்டத்தை அடைந்துள்ளது.

### முக்கிய குறிப்புக்கள்

- குழுமத்தின் தொழிற்பாட்டு வரலாற்றில் அதிகூடிய வருவாயும், வரிக்கு முன்னரான இலாபமும்
- Business Today சஞ்சிகையினால் தரப்படுத்தப்பட்ட 40 முதன்நிலை கூட்டுறவுச் சங்கங்களில் முதலிடம் பெற்றுள்ளது
- சாதகமான சமூக, பொருளாதார மாற்றத்தின் வினையூக்கி
- கூட்டுறவு நோக்கத்தை வெளிப்படுத்தல்

அன்பின் பங்குதாரர்களே,

ஹேலீஸ் குழுமத்தின் தொழிற்பாட்டு வரலாற்றில் ரூபா 487.43 பில்லியன் மற்றும் ரூபா 42.75 பில்லியன் ஆகிய தொகைகளை அதிகூடிய வருவாயாகவும், வரிக்கு முன்னரான இலாபமாகவும் பதிவு செய்து, ஆய்வுக்குட்பட்ட இவ்வருட முடிவில், ஹேலீஸ் குழுமம் பெற்ற சாதனை பற்றி நான் இங்கு குறிப்பிடுகின்றேன். பல தசாப்த காலமாக, ஒருபோதும் நாம் கண்டிராத தீவிரமான கொந்தழிப்பு, நிச்சயமற்ற தன்மை, அளவுக்கு மிஞ்சிய பணவீக்கம் ஆகிய சூழ்நிலைகளில், ஹேலீஸ் குழுமம், முக்கியமான சாதனையை வெளிப்படுத்தியுள்ளது. இது, எமது பரந்தளவிலான பங்குதாரர்களின் சுற்றுச் சூழலுக்கு பெறுமதி சேர்க்கையை தொடர்ந்து உறுதிப்படுத்தும் வகையில், நாம் தீர்மானம் மிக்க தலைமைத்துவம் மற்றும் தனித்துவமான மன உறுதி கொண்ட எமது அணியில் நம்பிக்கை கொண்டுள்ளோம். சபை சார்பாக ஹேலீஸ் பீஎல்சி யின் 2023 மார்ச் 31 ஆம் திகதி முடிவடைந்த நிதியாண்டுக்கான 10வது ஒருங்கிணைக்கப்பட்ட வருடாந்த அறிக்கை மற்றும் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்களை உங்கள் முன் சமர்ப்பிப்பதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன்.

மீளாய்வுக்கு உட்பட்ட இவ்வருடத்தில் குழுமத்தின் பெறுமதிகள், நெகிழ்ச்சி என்பன பாரிய அளவில் வலியுறுத்தப்பட்டுள்ளன. நாட்டின் கடினமான சூழ்நிலைகளுக்கு மத்தியில், சாதகமான சமூக, பொருளாதார மாற்றங்களை ஏற்படுத்துவதற்கான ஒரு வினையூக்கியாக உருவெடுத்து, அதன் செயற்பாடுகளைத் தொடர்ந்து முன்னெடுப்பதற்காகவும், வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கும் வாழ்வாதாரத்தை உறுதிப்படுத்துவதற்கும் ஹேலீஸ் குழுமம் அனைத்து சவால்களையும் ஒன்றிணைத்து உச்சத்தை அடைந்துள்ளது. ஹேலீஸ் பீஎல்சி Business Today யின் 40 முதன்நிலைக் கூட்டுறவு நிறுவனங்களில் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளது என்பதையும், நான் பெருமிதத்துடன் குறிப்பிடுகின்றேன். இவ்விடம் குழுமத்தின் நிலையாதார நிலை மாறுபட்ட, நெகிழ்ச்சியுடைய மற்றும் புத்தாக்கமான வர்த்தகத்தை உறுதிப்படுத்தும் சான்றாக அமைகிறது.

### நோக்கத்தை உந்துதல்

கூட்டுறவு நோக்கமானது, கடினமான சூழ்நிலைகளில், ஒரு முக்கியமான ஒன்றிணைக்கும் விடயமாக இருந்துள்ளது. இவ்வாண்டின் போது, ஹேலீஸ் பீஎல்சி, அதன் "அனைத்தையும் உள்ளடக்கிய உலகத்தையும், செழிப்பை ஊக்குவிக்கும் புவியையும்" என்ற அதன் நோக்கத்தை வெளிப்படுத்தியது. இது, கீழே குறிப்பிடப்பட்டுள்ள அனைத்தையும் உள்ளடக்கிய, முறையான செயன்முறையைக் கொண்டுள்ளது. இச்செயன்முறை, நிறுவனத்தின் பலதரப்பட்ட அடுக்குகளுக்கு இடையே, கருத்துக்கணிப்பு, கருத்துக்களை உருவாக்குதல் மற்றும் விவாதங்கள் என்பனவற்றை உள்ளடக்கியது. இந்த நோக்கமானது, விரிவான பொருளாதார சமூக மற்றும் சுற்றுச்சூழல் சூழ்நிலைகளில் எமது அபிலாஷைகளை அடையக்கூடிய ஒரு உந்து சக்தியாகவும், நிறுவனத்தின் மூலோபாயம் மற்றும் பெறுமதி சேர்க்கை என்பவற்றை நீண்டகாலத்தில் உருவாக்கக்கூடிய ஒரு சக்தியாகவும் செயற்படுகிறது. இவ்வருடத்தின் போது, குழுமத்தின் அனைத்துத் துறைகளும், தமது நோக்கக் கூற்றுக்களை உருவாக்கி வெளிப்படுத்தின. இதன்மூலம், குழுமம், நீண்டகாலத்தில் எவ்வாறு தொழிற்பட வேண்டும் என்ற தொலைநோக்கையும், எமது பங்குதாரர்களுக்கு எவற்றை வழங்க வேண்டும் என்பதையும் உருவாக்குகிறது.

### இடர்கள், யதார்த்தங்கள் மற்றும் எதிர்பார்ப்புகள்

அளவுகடந்த மற்றும் எதிர்பாராத சவால்கள் என்பன, இவ்வருடத்தின் போது, வர்த்தகத் தலைவர்கள் மீது அனுதாபம் மற்றும் தீர்மானம் மிக்க முடிவுகள் ஆகிய அசாதாரணமான கோரிக்கைகளை இவ்வாண்டில் தேவைப்படுத்தின. உலகளாவிய ரீதியில் தொடர்ந்து மூன்று வருடங்கள் எற்பட்ட பாதகமான விளைவுகள், COVID-19 மற்றும் எதிர்பாராத இடையூறுகள் மூலம் ஏற்பட்ட புவியியல், அரசியல் கொந்தழிப்புகள், பொருட்களின் விலையேற்றம், நிதித்துறை கொந்தழிப்பு, விநியோக சங்கிலியில் ஏற்பட்ட இடையூறுகள், அதிகரித்து வரும் பணவீக்கம் என்பனவற்றை உளடளடக்கியது. இவை அனைத்தும், உலகளாவிய வளர்ச்சியை 2022 இல் மந்தகதியாக்கியது. 2021 ஆம் ஆண்டுடன் ஒப்படும் போது, இப்பாதிப்பு, அபிவிருத்தியடைந்த பொருளாதாரம், அபிவிருத்தியடைந்து வரும் பொருளாதாரம் ஆகிய இரண்டையும் பாதித்தது.

நாடு என்ற ரீதியில், இவ்வாண்டின் போது, இலங்கையும் எதிர்பாராத பாரிய பொருளாதார சவால்களை எதிர்கொண்டதன் மூலம், குடும்பங்களையும், வர்த்தகங்கள் மற்றும் அரசாங்கம் ஆகியனவற்றையும் கடினமான சூழ்நிலைக்குத் தள்ளியது. இந்த நெருக்கடி, நிதி மற்றும் நடைமுறைக் கணக்குகளில் உள்ள இரட்டைப் பற்றாக்குறை உட்பட வெளிப்புறக் காரணிகள் மற்றும் அமைப்பு ரீதியான சமமற்ற தன்மை என்பவற்றில் இருந்து உருவாகியது. இவை அனைத்தும் ஒன்றிணைந்து, 2022 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் வெளிநாட்டுக் கடன்களை இரத்துச் செய்யும் செய்தியை வெளியிடுவதற்கு இலங்கை காரணமாக அமைந்தது. நாட்டின் அனைத்துத் துறைகளிலும் பொருளாதார செயற்பாடுகள் முடங்கியதன் காரணமாக, நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 2022 இல் 7.8% ஆகச் சுருங்கியது. பெருந்தொகை மக்களால் எதிர்கொள்ளப்பட்ட பலதரப்பட்ட கடினமான சூழ்நிலைகள், நாட்டில் ஆர்ப்பாட்டங்களையும், அமைதியின்மையையும் ஏற்படுத்தியதோடு, அரசியல் ஸ்திரத்தன்மையையும் உருவாக்கி, 2022 இல் அரசியல் தலைமைத்துவத்தில் பல்வேறு மாற்றங்களையும் உருவாக்கின.

இந்த நெருக்கடி தீவிரமடைந்ததன் காரணமாக, விநியோக சங்கிலிகளில் ஏற்பட்ட இடையூறுகள் இறக்குமதி மட்டுப்பாடுகள், அந்நியச் செலாவணி பற்றாக்குறை, கடன் கடிதங்களைத் திறப்பதில் ஏற்பட்ட சிக்கல்கள் என்பன இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களை வர்த்தகம் செய்வதில் பலத்த பாதகமான விளைவுகளை ஏற்படுத்துவதன் மூலம் வர்த்தக நடவடிக்கைகள் முற்றாகப் பாதிக்கப்பட்டன. போக்குவரத்து இடையூறுகள், துறைமுகத்தில் ஏற்பட்ட தாமதங்கள், எண்ணெய் பற்றாக்குறைகள், மின்சார விநியோகத்தில் ஏற்பட்ட தடைகள் என்பன வியாபாரத்தின் நாளாந்த தொழிற்பாடுகளை மோசமாகப் பாதித்து, நுகர்வோரைம், வர்த்தகர்களையும் கடினமான சூழ்நிலைக்கு இட்டுச் சென்றது.

இந்தப் பின்னணியில் அரசாங்கமும், மத்திய வங்கியும் ஒருங்கிணைந்த கொள்கைத் திட்டங்களை மேற்கொள்வதன் மூலம், நெருக்கடிகளைத் தடுக்க முயற்சித்தன. நிதிக் கொள்கை மீது மேற்கொள்ளப்பட்ட எதிர்பாராத இறுக்கம், 2022 ஜனவரி தொடக்கம் 2023 மார்ச் வரை 1,050 அடிப்படை மொத்தப் புள்ளிகளினால் கொள்கை வீதங்கள் அதிகரிக்கப்பட்டன. இதன் விளைவாக, சராசரி எடையிடப்பட்ட முதனிலை கடன் வழங்கும் விகிதம் (AWPLR) 2022 ஏப்ரல் மாதம் 13.02% ஆகவிருந்து, 2022 நவம்பர் மாதம் 28.25% ஆக அதிகரிப்பதன் மூலம் சந்தை வட்டி விகிதங்கள் தீவிரமாக அதிகரித்தன. இவ்விதம் 2023 மார்ச் மாதம் 21.40% ஆக வீழ்ச்சியடைந்துள்ளது. இவ்வருடத்தில் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணுடன் உயர்ந்த பணவீக்கம் (CCPI) 2022 செப்படம்பர் மாதம் 69.8% ஆக உயர்வடைந்தது. இது, தொழிற்பாட்டு விலைகள், இலாபம் பெறும் விழிம்புகள் என்பனவற்றில் அழுத்தங்களை ஏற்படுத்தின. மேலும், உயர்வடைந்த பணவீக்கம், கொள்வனவு சக்தி, உணவுப் பாதுகாப்பு, வாழ்க்கைத் தரம் என்பனவற்றில் தீவிரமான பாதிப்பை ஏற்படுத்தியதுடன், வறுமை மட்டங்கள் சுமார் இரட்டிப்பாக அதிகரித்துள்ளன.

# தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரியின் பிரதிபலிப்புக்கள்

அந்நியச் செலாவனி ஒதுக்குகள் வீழ்ச்சி அடைந்தமை மற்றும் தீவிரமடைந்த அந்நியச் செலாவனி அழுத்தம் காரணமாக, மத்திய வங்கி அந்நியச் செலாவனி விகிதத்தைத் தீர்மானிப்பதில் பாரிய நெகிழ்வுப் போக்கைக் கடைப்பிடித்தது. இறுதியில், இச்செயற்பாடு 2022 மார்ச் மாதத்தில் கடன் சுமையைக் குறைத்தது. சந்தைப் பங்குபற்றுநர்களின் அதிகரிப்புக் காரணமாக, அடுத்தடுத்த வாரங்களில் ரூபாவின் பெறுமதி பாரியளவில் வீழ்ச்சியடைந்தது. எவ்வாறாயினும், வருடத்தின் பிற்பட்ட காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட இறுக்கமான நிதிக் கொள்கை மற்றும் வெளிநாட்டுச் செலாவனி வெளியேற்றத்தைத் தடுப்பதற்கான ஏனைய வழிமுறைகள் என்பன இலங்கை ரூபாவின் பெறுமதியை அதிகரித்து, நிதி வருடத்தின் பிற்பட்ட காலப்பகுதியில் நாட்டின் வெளிவாரித் துறை படிப்படியாக மீட்சியடைய வழிவகுத்தது.

நிதி ஒருங்கிணைப்பு முனைப்புகளுக்கு அமைவாக, அரசாங்கம் பலதரப்பட்ட வருமான அணிதிரட்டல் வழிமுறைகளை அறிவித்தது. இது, நியம கூட்டுறவு வருமான வரி விகிதத்தை அதிகரித்தல், சில சலுகைகளை நீக்குதல், தனிப்பட்ட விழிப்பு வருமான வரி விகிதத்தை உயர்த்துதல் மற்றும் பெறுமதிசேர் வரியின் தரத்தை அதிகரித்தல் என்பவற்றை உள்ளடக்கியது. நீண்டகால பாரிய பொருளாதார ஸ்திரத் தன்மையை அடைவதற்கு, நிதிச் சீர்திருத்தங்கள் முக்கியமானவை என நாம் அறிந்திருப்பினும், அரசாங்கத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட 30% விரி விதிப்பைத் தொடர்ந்து, ஏற்றுமதியை அடிப்படையாகக் கொண்ட வர்த்தகங்கள் பாதகமான விளைவுகளைச் சந்தித்திருப்பதனால், அவை மீள் முதலீடு செய்வதில் சிரமங்களை எதிர்கொள்கின்றன. அத்தகைய சிரமங்கள் போட்டித் தன்மையை இழக்கச் செய்வதுடன், இந்த நாட்டிற்கு முக்கியமாகத் தேவைப்படுகின்ற அந்நியச் செலாவனியை ஈட்டும் தகைமையிலும் பாதிப்பை ஏற்படுத்துகிறது. எனவே, அரசாங்கம் இவற்றைக் கருத்திற் கொள்ள வேண்டுமென நாம் வேண்டுகோள் விடுக்கிறோம்.

### 2022/23 ஆண்டுக்கான எமது நிதிப் பெறுபேறுகளின் பிரதிபலிப்பு

இலங்கையின் வர்த்தகத்துறையில் கடந்த மூன்று வருடங்களாக ஏற்பட்ட சவால்களுக்கு முகம் கொடுத்த எமது குழுமம், விரிதிறனைக் கட்டியெழுப்பும் நோக்கில், அதன் வர்த்தகத்தில் உச்ச பயனடைவதற்கும், குழுமத்தைத் தக்க நிலையில் மீள வைத்துக் கொள்ளவும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. குழுமத்தின் நீண்டகாலம் நிலைத்திருக்கின்ற "எமக்கு இயலும்" என்ற மனப்பாங்கின் அடிப்படையில், எமது அணிகள் மூலோபாய எதிர்வுகூறல்களை வெளிப்படுத்தியதுடன், அனைத்து இடங்களிலும், குழுமத்தின் தொழிற்பாடுகள் நிறைவேற்றப்படுவதை உறுதிப்படுத்துவதற்கும், கண்டுபிடிப்பு சுழற்சிகள், நிலையான நுகர்வோர் நம்பிக்கைகள் மற்றும் திரவத்தன்மையைப் பாதுகாத்தல் போன்றவற்றில் வினைத்திறனான திட்டங்களை மேற்கொண்டுள்ளது. குழுமம், அதன் வரலாற்றில் ரூபா 487.43 பில்லியனை 44% உயரிய வருவாயாக வெளிப்படுத்தி, கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில், போக்குவரத்து, ஆடைத்தொழில், தூய்மைப்படுத்தல் மற்றும் பாதுகாப்பான கையுறைகளைத் தயாரிக்கும் துறை உட்பட ஏற்றுமதி சார்ந்த துறைகளில் வலுவான வளர்ச்சியைக் காட்டியுள்ளது. 28% ஒருங்கிணைந்த வருவாயுடன் போக்குவரத்து குழும வருமானத்தில் பாரிய பங்களிப்பாளராக உருவெடுத்துள்ளது.

தேய்மானத்திற்கு முன்னரான வட்டி வரி குழும வருமானங்கள் மற்றும் பதிவழிப்பு (EBITDA) மற்றும் வட்டி வரிக்கு முன்னரான குழுமத்தின் வருமானம் (EBIT) முறையே 69% மற்றும் 82% ஆக உயர்வடைந்துள்ளது. இது, இவ்வருடத்தின் போது போக்குவரத்து, தூய்மைப்படுத்தல், விவசாய மற்றும் தோட்டத்துறைகள் என்பன மூலம் 71.08 பில்லியனாக பதிவு செய்யப்பட்டுள்ளது. மாறுபட்ட சாதகமான அந்நியச் செலாவனி விகிதம், அதிகரித்த வர்த்தக நடவடிக்கைகள் மூலமாக இந்த வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. நிதி வருமானம் 23% ஆல் அதிரித்து, ரூபா 20.72 பில்லியனாக உள்ளது. அதேவேளை, நிதிச் செலவினம் இரண்டு மடங்கை விடவும் அதிகரித்து ரூபா 39.54 பில்லியனாக அதிகரித்துள்ளது, இது, நாட்டில் இருந்த உயர் வட்டிவீத சூழ்நிலைகளில் காணப்பட்ட மாற்றமாகும்.

குழுமம் இவ்வருட காலப்பகுதியின் போது அதன் தொழிற்பாட்டு வரலாற்றில் உயரிய வரிக்கு முன்னரான இலாபத்தைப் பதிவு செய்து வெற்றி கண்டுள்ளது. இந்த வெற்றியானது, எமது நிதிச் செயற்பாடு 20% ஆல் அதாவது, ரூபா 42.75 பில்லியனாக அதகரித்தமையை எடுத்துக்காட்டும் அளவு கோலாகும். இந்த இலாபத்திற்கு போக்குவரத்து, தூய்மைப்படுத்தல், பெருந்தோட்டங்கள், விவசாயம் மற்றும் பாதுகாப்பான கையுறைகளைத் தயாரிக்கும் துறை என்பன பாரிய பங்களிப்புச் செய்துள்ளன. நாட்டில் பல சவால்கள் நிலவிய போதிலும், 12 மொத்த துறைகளுள் 8 துறைகள் இவ்வருடத்தின் போது வரிக்கு முந்திய இலாபத்தை எட்டியது. இதன் மூலம், சாதகமான வெளியக ஏற்றத் தாழ்வுகளை வினைத்திறனாக எதிர்கொண்டது என்பதைக் காட்டுகிறது.

குழுமத்தின் வட்டிச் செலவு, இவ்வருடத்தின் போது 98% ஆக, அதாவது, ரூபா 15.08 பில்லினாக அதிகரித்தது. இது, இவ்வருட காலப்பகுதியின் போது, குழுமத்தின் 21% இல் இருந்து 36% ஆக அதிகரித்த வினைத்திறான வட்டி விகிதத்தின் பெறுபேறுகளின் அடிப்படையில் ஏற்பட்ட அதிகரிப்பாகும். அதன் பெறுபேறாக குழுமத்தின் வட்டிக்குப் பின்னரான இலாபம், இக்காலப்பகுதியின் போது 2% இல் ரூபா 27.67 பில்லியனாகச் வீழ்ச்சியடைந்தது.

### வலிமை மற்றும் ஸ்திரத்தன்மை

ஆதனம், உபகரணம், தளபாடம் என்பவற்றின் விரிவாக்கம் மூலம் குழுமத்தின் மொத்த சொத்துக்கள் 2% ஆல் 412.74 பில்லியனாக அதிகரித்தது. இது, பாதுகாப்பான கையுறைகளைத் தயாரிக்கும் துறையில் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய விளையாட்டுக் கையுறை தயாரிப்பு வசதி, ஆடைத் தொழிற்துறையின் உபகரணங்களை உயர்த்துதல் மற்றும் போக்குவரத்துத் துறையில் மேற்கொள்ளப்பட்ட பன்முகப் பாவனையாளர் பங்கீட்டு நிலையில் முதலீடுகள் என்பவற்றைப் பிரதிபலிக்கின்றது. இவ்வருடத்தின் போது ஹேலீஸ் (வரையறுக்கப்பட்ட ஹேலீஸ் பெருந்தோட்ட சேவைகள் ஊடாக) மற்றும் மத்திய மலைநாட்டிலும் கரையோரப் பிரதேசங்களில் சுமார் 6,519 ஹெக்டயர்களை கொண்ட 14 பெருந்தோட்டங்களில் பலதரப்பட்ட பயிர்ச் செய்கைகள் மேற்கொள்ளும் முன்னணி பிராந்திய பெருந்தோட்டக் கம்பனியாக ஹொரண பெருந்தோட்ட பீஎல்சி யில் இருந்து பெரும்பான்மைப் பங்குகளைக் கையேற்றது. இந்தக் கையேற்பின் மூலமாக உருவாக்கப்பட்ட உள்ளார்ந்த ஒருங்கிணைப்பு குழுமத்தின் நிலையை நாட்டின் பெருந்தோட்டத் துறையில் திடப்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

குழுமத்தின் தகைமை தயாரிப்புத் துறையின் உட்கட்டமைப்புத் துறையை வலுப்படுத்துதல் மற்றும் உற்பத்தித் திறனை மேம்படுத்துதல் என்பன நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுத்து, பெறுமதி சேர்க்கைக்கான நீண்டகால வாய்ப்புக்களை உருவாக்க குழுமம் நாட்டில் ஏற்பட்ட நிச்சயமற்ற சூழ்நிலைகளுக்கு மத்தியில் தொடர்ச்சியான முதலீடுகளை மேற்கொண்டு வருகிறது. இந்த முதலீடுகள் குழுமத்தின் அந்நியச் செலாவனி ஈட்டும் தகைமையையும் வலுப்படுத்தியுள்ளது. இது, மேலும், வருவாய் ஈட்டும் முறைகளை பன்முகப்படுத்துவதுடன், அந்நியச் செலாவனி ஏற்றத் தாழ்வு சூழ்நிலையில் நெகிழ்வுத் தன்மையை அதிகரிக்கும். அதேவேளை, விநியோக சங்கிலியில் ஏற்பட்ட இடையூறுகள் மற்றும் போக்குவரத்தில் காணப்பட்ட தடைகள் என்பன காரணமாக, குழுமம் தயாரிப்புக்கான இருப்புகளையும், தயாரிக்கப்பட்ட பொருட்களையும் பாதுகாத்து வைத்திருக்க வேண்டிய கட்டாய சூழ்நிலைக்கு தள்ளப்பட்டமையினால், இக்காலப்பகுதியின் போது சரக்கிருப்புகள் 6% அதிகரித்தன.

இக்காலப்பகுதியின் போது வலுவான இலாபமீட்டல் மற்றும் தக்கவைப்பு மூலமாக, மொத்தப் பங்குரிமை 17% ஆக ரூபா 122.71 பில்லியனாக அதிகரித்தது. வட்டி அடிப்படையிலான பெறுவனவுகள் குறைவடைந்ததன் காரணமாக, குழுமத்தின் நிதி இயல்பு வலுவடைந்தது. இது, ரூபா 171.93 பில்லியனில் இருந்து ரூபா 159.70 பில்லியனாகக் குறைவடைந்தது. இதன் பெறுபேறாக குழுமத்தின் கடனுக்கான பங்குரிமை விகிதம் 1.63 தடவைகளில் இருந்து 1.30 தடவைகளாகக் குறைவடைந்தன. குழுமத்தின் நிதித் தோற்றப்பாட்டின் வலிமை அண்மைய வருடங்களில் குழுமம் அதிகரித்த பன்முகப்படுத்தப்பட்ட சம்பாத்தியங்கள். தொழிற்பாட்டு மூலதன சுழற்சியில் அதி உச்ச பயன்பாட்டைப் பெறுதல் மற்றும் வட்டி மற்றும் அந்நியச் செலாவனி வீதங்களின் ஏற்றத் தாழ்வுகளின் வெளிப்பாடுகளைத் தணிப்பதற்கான கடன் தோற்ற மறுசீரமைப்பு ஆகிய மூலோபாயத் தலையீடுகளின் மூலம் சரிபார்க்கப்பட்டது.

### பொருளாதார பெறுமதி பாய்ச்சல்கள்

பெறுமதி சங்கிலி ஊடாக, வாடிக்கையாளர்கள், விநியோகத்தர்கள், வர்த்தகப் பங்காளிகள் மற்றும் சமூகங்களுடன் விரிவான உறவுகளைப் பேணுவதன் மூலம், இலங்கையில் காணப்படும் சமூக, பொருளாதாரத் தாக்கத்தை ஏற்படுத்தும் முக்கிய நிறுவனங்களுள் ஒன்றாக நாம் இருப்பதைப் பெருமையுடன் கூறிக்கொள்கிறேன். குழுமம், சாதாரண வர்த்தக நடவடிக்கைகளின் போதும், சாதகமான சமூகப் பொருளாதாரத் தாக்கங்களை ஏற்படுத்துவதற்கு அழுத்தம் கொடுக்கிறது. உதாரணமாக, இந்தக் காலப்பகுதியின் போது குழுமம் 5.5% இலங்கையின் மொத்த ஏற்றுமதி வருமானத்தை ஈட்டிக்கொடுத்து, 650.61 மில்லியன் அமெரிக்க டொலர் அந்நியச் செலாவணியைப் பெற்றுக்கொடுத்தது. மேலும், குழுமம், ரூபா 24.33 பில்லியனை இலங்கைக்கு வரிகளாக செலுத்தியது. மேலும், 29,453 தொழிலாளர்களுக்கு இலங்கையில் வேலைவாய்ப்பைப் பெற்றுக்கொடுத்துள்ளது. இவற்றுள் 57% ஆன வர்த்தகம் மேல் மாகாணத்திற்கு வெளியே செயற்பட்டு வருகின்றன. அனைத்தையும் உள்ளடக்கிய வியாபார மாதிரிகள் ஊடாக பெறுமதிகளைச் சேர்ப்பது எப்போதும் குழுமத்தின் ஒரு அடிப்படைப் பண்பாக இருந்துள்ளதோடு, குழுமம் பன்முகப்படுத்தப்பட்ட வர்த்தகங்கள் ஊடாக உலகளாவிய ரீதியில் உள்ள விநியோக சங்கிலியில் 11,000 க்கும் மேற்பட்ட கிராமிய வெளிவாரி பயிர்ச் செய்கையாளர்கள், விநியோகத்தர்கள் மற்றும் ஏனைய வியாபார பங்குதாரர்களுடன் இணைந்து கொண்டுள்ளது. மேலும், நாம், முக்கியமான கைத்தொழில் துறைகளுக்கு இடையே, திறன்களைக் கட்டியெழுப்புதல், திறன் அபிவிருத்தி, விவசாய விரிவாக்க சேவைகள் ஊடாக அறிவு மற்றும் சிறந்த நடைமுறைகளைப் பிரசாரம் செய்தல் மற்றும் நாடு முழுவதிலும் நன்கு வடிவமைக்கப்பட்ட பயிற்சி நிகழ்ச்சிகளை நடத்துகின்ற ஒரு இயக்கியாகச் செயற்பட்டு வருகின்றோம்.

### பதிலளிக்கக்கூடிய மற்றும் பொறுப்புடைய ஆளுகை

நெருக்கடிகளின் போது, வினைத்திறனான ஆளுகை நடைமுறைகள் எப்போதுமில்லாதவாறு முக்கிய இடம்பெறுகிறது. குறிப்பிடத்தக்களவு ஏற்றத்தாழ்வுகள் மற்றும் நிச்சயமற்ற சூழ்நிலைகளின் பின்னணியில் குழுமத்தின் சபை வெளிவாரி காரணிகளின் தாக்கத்தை எதிர்கொள்ளவும், தீர்மானம் மிக்க நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், முகாமைத்துவ அணிக்கு ஆதரவை வழங்கும் துரிதமான மேற்பார்வைச் செயற்பாட்டை மேற்கொண்டது. எமது நோக்கத்திற்குப் பொருத்தமான ஆளுகைக் கட்டமைப்பும், சபை மற்றும் குழும முகாமைத்துவக் குழுக்களிடையே (GMC) வலுவான மறுசீரமைப்பை உருவாக்க உதவியது. இந்த மறுசீரமைப்பு, துரித மற்றும் வினைத்திறனான தீர்மானங்களை மேற்கொள்வதற்கு அவசியமாகும். குழும முகாமைத்துவக் குழு, தனது கூட்டத்தை ஒவ்வொரு வாரமும் கூட்டியதுடன், அதற்கு மேலதிகமாக, குறுகியகால அறிவித்தலில் உரிய நேரத்திற்கான நடைமுறைக்குச் சாத்தியமான முடிவுகளை எடுத்தது. இதேவேளை, துறைமட்டம் சார்ந்த நிர்வாகக் குழுக்கள் தொடக்கம் குழும முகாமைத்துவக் குழுக்கள் வரை பன்முகப்படுத்தப்பட்ட அடுக்குகளிடையே மீளாய்வை மேற்கொள்ள சபை உயர்மட்ட கண்காணிப்பினை வழங்கியது. குழுமத்தின் மூலோபாய அபிலாஷைகள் மற்றும் இடர் முகாமைத்துவம் என்பவற்றுக்கு வழங்கப்பட வேண்டிய அவசியமான மேற்பார்வை தொடர்பில் சபையானது, அனுபவம், திறன்கள் மற்றும் பன்முகப்படுத்தப்பட்ட கண்ணோட்டங்கள் என்பவற்றை முறையாக சமத்துவமான அடிப்படையில் கொண்டிருந்ததையிட்டு நான் திருப்தியடைகிறேன்.

இவ்வருட காலத்தின் போது, பல்வேறு நிர்வாக முகாமையாளர்கள் மற்றும் குழும முகாமைத்துவக் குழுவில் உள்ள அங்கத்தவர்களைக் கொண்டு அர்ப்பணிப்புடன்கூடிய ஒரு ESG குழு உருவாக்கப்பட்டது. இந்தக் குழு, குழுமத்தினுடைய ESG கட்டமைப்பு, மூலோபாயம், கொள்கைகள், இடர்கள் மற்றும் வாய்ப்புகள் மற்றும் வெளிவாரி கடமைகள் என்பனவற்றை மேற்பார்வை செய்யும் பணி வழங்கப்பட்டது. குறிப்பிட்ட குழுவானது, ESG தொடர்பான முன்னுரிமையளிக்கும் விடயங்களை ஆழமாக, கிரமமாக ஆராய்வதற்கு ஒரு தளமாக இருந்தது. இதன் மூலம், ESG விடயங்கள் தொடர்பாக சபைக்கு அறிக்கையிடுவதற்கு ஒழுங்கமைக்கப்பட்ட, வினைத்திறனாக வலுவைச் சேர்த்தது. மேலும், குழுமம், இவ்வருடத்தின் போது, இலஞ்சம் மற்றும் ஊழலுக்கு எதிரான கட்டமைப்பை மேலும் வலுப்படுத்தியது. இதன் மூலம், இலஞ்சத்திற்கு எதிராக பூச்சிய சகிப்புத் தன்மை உருவாக்கப்பட்டது. நான் சபை முகாமையாளர்களுடன் இணைந்து நிறுவனத்தில் ஊழல் தொடர்பான இடர்களைத் தணிப்பதற்குத் தேவையான உள்ளகக் கட்டுப்பாடுகள் இருப்பதை உறுதிப்படுத்துவேன் எனக் குறிப்பிடுகிறேன். இவ்வருடத்தின் போது, நிறுவனம், ஊழலுக்கு எதிரான சட்டங்கள் உட்பட அனைத்துப் பொருத்தமான சட்டங்களையும், ஒழுங்கு விதிகளையும் கடைப்பிடித்தது.

### நுகர்வோரை மையப்படுத்திய தயாரிப்புகளை துரிதப்படுத்தல்

எமது மூலோபாய அபிலாஷைகளில் புதிய தயாரிப்புகளை முன்னிலைப்படுத்திய வளர்ச்சியானது, எப்போதும், வெளிப்படையான பகுதியொன்றாக அமைந்துள்ளது. எமது வர்த்தகமானது, நுகர்வோரை மையப்படுத்திய வகையில் தயாரிப்புகளைத் துரிதப்படுத்துவதற்கு முக்கிய இடம் அளிப்பதன் மூலம், மாறிவருகின்ற மாறுபட்ட தேவைகளுக்கு ஏற்ற வகையில் உயர்மட்ட அளவில் பொருட்களை வழங்க உதவுகிறது. அண்மைய வருடங்களில், வலு, நீர் மற்றும் கழிவு ஆகிய முக்கியமான வளங்களை எமது தயாரிப்புகள் மற்றும் செயன்முறைகளில் உச்சக்கட்ட அளவில் பயன்படுத்துவதற்கு நாம் புதிய வழிமுறைகளைக் கண்டு பிடித்துள்ளமையினால், எமது புதிய தயாரிப்புகளை மையப்படுத்திய செயற்பாட்டில் நிலையாதாரத் தன்மை, பெருமளவில் பொருத்தமுடையது. உதாரணமாக, ஆடைக் கைத்தொழில் துறை, தளபாட உற்பத்திக் கைத்தொழிலில் இருந்து வெளியேற்றப்படும் சாயத்தில் இருந்து உருவாக்கப்பட்ட நவீன ஆடை உற்பத்தியான "Warna by mahogany" என்ற புடவையை உற்பத்தி செய்தது. மேலும், கட்டுமானக் கைத்தொழில் துறை குறைந்த காபன் அலுமினிய அளவைக் கொண்ட ஓஷோன் என அழைக்கப்படும் ஒரு புதிய கண்டுபிடிப்பைத் தயாரித்துள்ளது. இது, அதனுடைய மீள் சுழற்சிப் பொருட்களின் மீதான நம்பிக்கை காரணமாக, குறிப்பிடத்தக்களவு குறைந்த சுற்றாடல் பாதிப்பை ஏற்படுத்தும். மேலும், தூய்மைப்படுத்தல் துறையின் காபன் வலு இருப்பு மற்றும் பாதுகாப்பான கையுறைகளைத் தயாரிக்கும் துறையின் விளையாட்டுக் கையுறை என்பனவும் எமது வெற்றிப் பாதையில் முக்கிய இடம்பெறும் விடயங்களாகும்.

### ESG யை உட்பொதித்தல்: செயற்பாட்டுக்கான இலட்சியம்

உயிர்த்தன்மை இழப்பு, காலநிலை மாற்றம், அதிகரித்து வரும் வருமான சமத்துவம் இன்மையினால் ஏற்பட்ட வள சுருக்கம் என்பவற்றினால் ஏற்பட்ட அவசர நிலைமை, அதன் பெரும் தாக்கம் என்பன உலகளாவிய சுற்றாடல், சமூக மற்றும் நெறிமுறை சவால்களை தீவிரமடையச் செய்ததன் காரணமாக, அனைத்துப் பங்குதாரர்களின் வர்த்தகம் மீதான அதிகரித்த கண்காணிப்பு தேவைப்படுகின்றது. பல்வேறுபட்ட எம்முடைய வர்த்தகப் பரப்பில் ஒரு நிலைத்தன்மையுடைய தலைமைத்துவத்தைக் கொண்டிருக்கின்ற வகையில், எமக்கு எப்போதும் நிலைத்தன்மை மாத்திரம் போதுமானது அல்ல, அது, வியாபாரத்திற்கும் முக்கியமானது என்பதை நாம் தீவிரமாக நம்புகிறோம். 2022 ஆம் ஆண்டில் இந்த அர்ப்பணிப்பை ஒழுங்கு முறைப்படுத்துவதற்காக நாம் "ஹேலீஸ் லைஃப்கோட்" என்ற அனைத்தையும் உள்ளடக்கிய ESG யை உருவாக்கினோம். இது, எமது மூலோபாயம், இடர் முகாமைத்துவம், தீர்மானம் மேற்கொள்ளல் ஆகியவற்றுக்கு ESG விடயங்கள் ஒருங்கிணைப்பதற்கு ஒரு வலுவான தளமாக செயற்படுகின்றன. மேலும், குழுமம், அதனுடைய Scope 1 & 2 GHG புகைகளை 2030 இல் 30% ஆகக் குறைப்பதற்கு எதிர்பார்க்கின்றது. இதற்காக நாம் வலு மூலங்களை மீள் புதுப்பிப்பதற்கும், எண்ணெய் வள அடிப்படையிலான மூலங்களில் தங்கியிருப்பதைக் குறைத்துக் கொள்வதற்கும் மற்றும் எமது செயற்பாட்டில் காபன் பயன்பாட்டைக் குறைப்பதற்கும் எதிர்பார்க்கின்றோம். இவ்வருடத்தின் போது, காபன் பயன்பாடு 9% ஆல் குறைக்கப்பட்டதுடன், எமது வலு தேவைப்பாடுகளில் 67% மீள் புதுப்பிக்கப்பட்ட மூலங்களில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்டது என்பதை பெருமையுடன் குறிப்பிடுகின்றேன். மேலும், நிலைத்தன்மையுடைய வடிவமைப்பின் ஊடாக எமது தயாரிப்புகளில் இருந்து ஏற்படுகின்ற சுற்றாடல் தாக்கங்களையும் குறைப்பதற்கு பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன் மூலம், இயற்கை வளங்களின் பயன்பாடு குறைவடைந்து, தயாரிப்பின் வாழ்க்கை வட்டம் மீது, புகைகளையும் குறைத்துக்கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது. ஐக்கிய நாடுகளின் உலகளாவிய செயற்பாட்டின் (UNGC) ஒரு பங்குபற்றுநராகவும் இருக்கின்றோம்.

# தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரியின் பிரதிபலிப்புக்கள்

இதனடிப்படையில், UNGC யுடைய 10 எண்ணக்கருக்களுக்கு முக்கியத்துவம் வழங்கி அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றோம். 2008 ஆம் ஆண்டில் இருந்து UNGC உடைய CEO வோட்டர் மென்டேட்டையும் நாம் ஏற்றுக் கொண்டுள்ளோம். சுற்றாடல், சமூக மற்றும் ஆளுகை தொடர்பான இலக்குகளை அடைந்து கொள்வதற்கு, குழுமத்தினால் மேற்கொள்ளப்பட்ட ஏனைய விடயங்கள் இவ்வறிக்கையின் 120வது பக்கததில் தரப்பட்டுள்ளது.

### வாழ்க்கையை வளப்படுத்துதலும், வாழ்வாதாரங்களைப் பாதுகாத்தலும்

சமூக நன்மைக்கான தீர்மானம் எடுக்கும் உந்து சக்தியானது, எமது மூலோபாயத்தின் இன்றியமையாத ஒன்றாக இருப்பதுடன், அது, எமது செயற்பாடுகளுக்குள் தொடங்குகிறது. நாட்டில் ஏற்பட்ட அதிகரித்து வரும் பணவீக்கத்துடனான பொருளாதார நெருக்கடி, சமூக அமைதியின்மை என்பன எமது தொழிலாளர்களுக்கு நாளாந்தம் ஒரு சவாலாக அமைந்திருந்தன. இவை, நிதி மற்றும் மன ரீதியான அழுத்தங்களையும் ஏற்படுத்தின. இந்தச் சூழ்நிலையில், எமது மக்களைப் பாதுகாப்பதற்காக சம்பளம், மற்றும் விசேட நிவாரணக் கொடுப்பனவுகள் ஊடாக உதவியளிப்பதற்கான பல்வேறுபட்ட வழிமுறைகளும் அறிமுகப்படுத்தப்பட்டு, எமது அனைத்துத் துறைகளிலுமுள்ளவர்களைப் பாதுகாப்பதற்கு உபாய நுட்ப ரீதியிலான தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டன. உணவு விநியோக சங்கியில் ஏற்பட்ட இடையூறுகள் மற்றும் அபாயத்தை எட்டிய அளவிலான உணவுப் பாதுகாப்பு இன்மை என்பன காரணமாக ஏற்பட்ட பிரச்சினைகளைத் தவிர்ப்பதற்காக குழுமம், அதன் ஊழியர்களுக்குத் தேவையான உணவுப் பொருட்கள், பழ வகைகள், மரக்கறி வகைகள் என்பனவற்றை தொடர்ந்து விநியோகித்து வந்தது. மேலும், நாம், எரிபொருள் விலை ஏற்றத்தினால் ஏற்பட்ட தாக்கங்களைக் குறைக்கும் பொருட்டு, பல்வேறு முக்கியமான பிரதேசங்களில் போக்குவரத்து வசதிகளையும் செய்து கொடுத்துள்ளோம். நாட்டில் இருந்த இத்தகைய அசாதாரணமான சூழ்நிலைகளுக்கு மத்தியில், நாம் திறன்களை விருத்தி செய்தல், திறமைகளைக் கட்டியெழுப்புதல் போன்றவற்றில் தொடர்ச்சியாக முதலீடு செய்வதன் மூலம், எமது அணியை மேலும் ஊக்குவித்து, அவர்களின் தொழில் திறன்களை விருத்தி செய்ய உதவியுள்ளோம். மேலும், தீர்மானங்கள் மேற்கொள்ளப்படும் இடங்களில், பன்முகப்படுத்தலை அதிகரிப்பதற்காக எமது நிர்வாக மற்றும் முகாமைத்துவக் குழுக்களில் பெண்களின் பங்களிப்பை உறுதிப்படுத்துவதன் மூலம் ஆழமான தலைமைத்துவப் பண்பை அதிகரித்து நிறுவனக் கட்டமைப்பை விரிவடையச் செய்தோம்.

நிறுவனத்தின் வகிபாகம் பலதரப்பட்டது என்பதை நான் உறுதியாக நம்புவதுடன், ஹேலீஸ் குழுமம், அதன் வடிவமைப்பில் இவ்வனைத்தையும் உள்ளடக்கியுள்ளது. இத்தகைய உள்ளடக்கமானது, நியாயமான பொருளாதார வளர்ச்சிக்கும், சமூக ஸ்திரத்தன்மைக்கும் வழிவகுப்பதுடன், சமூகங்களுக்கு இடையே புரிந்துணர்வையும் வலுப்படுத்துகிறது, எமது விரிவாக்கப்பட்ட வெளிப் பயிர்ச் செய்கை மாதிரிகள் மூலம் மற்றும் சிறு உற்பத்தியாளர்களுக்காக நாடு பூராகவும் உருவாக்கப்பட்ட வலையமைப்பின் ஊடாக மேற்கொள்ளப்பட்ட விநியோகம் என்பன பொருளாதார மேம்படுத்தலை உந்தியதுடன், அது, அடிமட்ட சமூகங்களுக்கு உதவியளித்தது. கிராமிய விவசாயி தொடக்கம் உலகளாவிய மையங்கள் வரை நாம் எமது வர்த்தகத்தை விரிவாக்கி உள்ளமையையிட்டு பெருமை அடைவதோடு, நாட்டிற்கு பொருளாதார செல்வத்தையும், அதன் பலன்களையும் உருவாக்கியுள்ளோம்.

எமது சாதாரண வியாபார நடவடிக்கைகளுக்கு மேலதிகமாக, எமது துறைகள் இணைந்து மேற்கொள்கின்ற முயற்சிகள், அரசாங்க மருத்துவத் துறையில் காணப்பட்ட அத்தியாவசிய மருந்துப் பொருட்களின் தட்டுப்பாடுகளைக் குறை நிரப்பியது. இதன் கீழ், நாட்டின் பல பாகங்களிலுமுள்ள நிதி பற்றாக்குறையுள்ள அரசாங்க வைத்தியசாலைகளுக்கு பல்வேறுபட்ட நன்கொடைகளும் வழங்கப்பட்டன. (மேலதிக விபரங்களுக்காக 262வது பக்கத்தைப் பார்க்க).

### வர்த்தக செங்குத்து மீளாய்வு

வளங்களின் சிறந்த பயன்பாட்டுடன் கூடிய ஏற்றுமதி சார்ந்த வர்த்தகத்துறையில் ஏற்பட்ட வலுவான தொழிற்பாட்டு வளர்ச்சி, குழுமத்தின் வருமானத் தோற்றப்பாட்டை ஏற்றுமதி வருமானத் துறைக்கு மாற்றியதுடன், ஏனைய அந்நியச் செலாவணி வருவாய்களையும் பெற்றுக் கொடுத்தது. இவ்வருடத்தின் போது, இந்த வருமானம் 62% ஆகும். ஏற்றுமதித் துறை சார்ந்த துறைகளை மேம்படுத்துவதற்காக தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படும் முதலீடுகள் குழுமத்தின் முதலீட்டுத் திசையில் கட்டமைப்பு ரீதியிலான மாற்றங்களைப் பிரதிபலிப்பதுடன், அந்நியச் செலாவனியில் இருந்து பங்களிப்புகளை அதிகரிக்கவும் எண்ணுகிறது.

குழுமத்தின் வருமானம் அமெரிக்க டொலர்களில் குறிப்பிட்டால், இந்த வருடத்தின் போது 1.35 பில்லியன் அமெரிக்க டொலராவதுடன், வரிக்கு முன்னரான வருமானம் மற்றும் 6% ஆல் வட்டி அதிகரித்து, அதாவது, 169.57 மில்லியனினால் அதிகரிக்கப்பட்டது. அமெரிக்க டொலரில் வெளிப்படுத்தப்பட்ட இலாபத்தன்மையின் மேம்பாடு, ஏற்றுமதித் துறை சார்ந்த துறைகளில் ஏற்பட்ட வளர்ச்சியைப் பிரதிபலிக்கின்றது. எவ்வாறாயினும், அதிகரித்த நிதிச் செலவுகள் மற்றும் வரிச் சுமைகள் காரணமாக, ஒட்டுமொத்த இலாபமும் பாதிப்படைந்ததோடு, வரிக்கு முன்னரான இலாபம் இவ்வருடத்தின் போது 118.69 மில்லியன் அமெரிக்க டொலர்களால் வீழ்ச்சியடைந்தது.

கீழே தரப்பட்ட பகுதிகள் குழுமத்தின் வர்த்தகத் துறைகளின் உடைய செயற்பாடுகள் பற்றி ஒரு உயர்மட்ட கண்ணோட்டத்தைத் தருகின்றன. விரிவான கோப்புறை மீளாய்வுகளுக்காக 122 ஆம் பக்கத்தைப் பார்க்க.

### போக்குவரத்தும் தளவாடங்களும்

இவ்வருடத்தில், அட்வான்டிஸ் குழுமம் பாராட்டத்தக்க வளர்ச்சியை வெளிப்படுத்தியது.

**ECO தீர்வுகள்**

மூலோபாய அவதானம்

புதிய சந்தைகளில் நுகர்வோரின் கையகப்படுத்தல்
செயன்முறை வினைத்திறன்
பின்தங்கிய ஒருங்கிணைப்பு

| | |
|---|---|
| வருமானம் | +37% |
| EBIT | +238% |
| PBT | +50% |
| மொத்த சொத்துக்கள் | +7% |
| பொருளாதார பெறுமதி உருவாக்கம் | +96% |
| காபன் தடப் பதிவு | +6% |

**கைகளைப் பாதுகாத்தல்**

மூலோபாய அவதானம்

பெறுமதி சேர் தயாரிப்புகள் மீதான கவனம்
வினைத்திறன் மற்றும் விலை முகாமைத்துவ உந்துதல்
ஒருங்கிணைக்கப்பட்ட ESG

| | |
|---|---|
| வருமானம் | +36% |
| EBIT | +41% |
| PBT | +5% |
| மொத்த சொத்துக்கள் | -1% |
| பொருளாதார பெறுமதி உருவாக்கம் | +22% |
| காபன் தடப் பதிவு | -9% |

**சுத்திகரித்தல்**

மூலோபாய அவதானம்

பெறுமதி சேர் தயாரிப்புகளின் புதிய கண்டுபிடிப்புகள்
வினைத்திறன் மற்றும் உற்பத்தித்திறன்
விநியோக சங்கிலி வினைத்திறன்

| | |
|---|---|
| வருமானம் | +84% |
| EBIT | +169% |
| PBT | +78% |
| மொத்த சொத்துக்கள் | +1% |
| பொருளாதார பெறுமதி உருவாக்கம் | +90% |
| காபன் தடப் பதிவு | -1% |

**ஆடைக் கைத்தொழில்**

மூலோபாய அவதானம்

வர்த்தகப் பெயரை மையப்படுத்திய மூலோபாயம்
நிலைத்தன்மையை உட்பொதித்தல்
INNO கோப்புறையின் விரிவாக்கம்

| | |
|---|---|
| வருமானம் | +90% |
| EBIT | +135% |
| PBT | -5% |
| மொத்த சொத்துக்கள் | +9% |
| பொருளாதார பெறுமதி உருவாக்கம் | +22% |
| காபன் தடப் பதிவு | -5% |

இந்த நிறுவனம், குழுமத்தின் இலாபத்தில் அதிகூடிய பங்களிப்பாளராக தன்னை 30% பங்குகளினால் நிரூபித்து, அதன் வரிக்கு முன்னரான இலபாபமாக ரூபா 15.01 பில்லியனை அடைந்தது. கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில், இத்தொகை 38% ஆல் அதிகரித்துள்ளது. இந்த செயற்பாடு, இன்டர்நஷனல் பிரைட் மனேஜ்மன்ட், மரைன் அன்ட் எனர்ஜி மற்றும் ஏவியேஷன் சப்-செக்மன்ட்ஸ் என்பவற்றினுடைய வலுவான பங்களிப்பின் மூலம் இவ்வருடம் இலாபம் பெற்ற வருமானம் பதிவு செய்யப்பட்டது.

அட்வான்டிஸ் நிறுவனம், இலங்கைக்கு ஒருங்கிணைந்த போக்குவரத்து மற்றும் தளவாடங்களின் சேவைகளை வழங்கும் ஒரு நிறுவனமாகும் என்ற வகையில், அதன் வலுவான சந்தை நிலைமையை, வளர்ந்து வரும் வர்த்தக சூழ்நிலைகளில் தக்க வைத்துக் கொண்டுள்ள அதேவேளை, அதன் சர்வதேச தோற்றத்தையும் விரிவாக்குகிறது. இன்டர்நஷனல் பிரைட் மனேஜ்மன்ட் மற்றும் மரைன் எனர்ஜி சப்-செக்டர்ஸ் என்பன இத்துறையின் இலாபத்திற்கு முக்கிய பங்குதாரர்களாகும். 2022/23 வருட இறுதிப் பகுதியில் வளர்ச்சி விகிதம் படிப்படியாக வீழ்ச்சியடைந்த போதிலும், வருடத்தின் பெரும் பகுதியில் இன்டர்நஷனல் பிரைட் மனேஜ்மன்ட் மற்றும் பிரைட் மனேஜ்மன்ட் ஆகிய நிறுவனங்கள் பாராட்டத்தக்க வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளன. மரைன் மற்றும் எனர்ஜி துறை உள்நாட்டு சந்தைக்கு தேவையான உரிய நேரத்தில் பங்கர் எண்ணெய்யை பங்கீடு செய்தது. இதன் மூலம் வலுவான வருமானமும் இலாபமும் ஈட்டப்பட்டது. மேலும், அட்வான்டிஸ் நிறுவனம், அட்வான்டிஸ் லொஜிஸ்டிக்ஸ் சிட்டி என அழைக்கப்படும் ஒரே கூரையின் கீழ் அமைந்த பன்முக பாவனையாளர் பங்கீட்டு நிலையத்தை நிருவகிக்கும் பொறுப்பை பூர்த்தி செய்தது.

உலகளாவிய பொருளாதார நடவடிக்கையின் எதிர்பார்க்கப்பட்ட மந்தகதியில் இருந்து தோன்றிய குறுங்கால அழுத்தங்கள், வியாபாரப் பாய்ச்சல்கள் எவ்வாறு இருந்த போதிலும், அட்வான்டிஸ் நிறுவனத்தைப் பொறுத்த வரையில், சாதகமான தோற்றப்பாட்டை வழங்கியதுடன், துறைமுக உட்கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்துவது தொடர்பான கொள்கைத் தீர்மானங்களுடன், இலங்கை பொருளாதாரத்தில் படிப்படியாக மீட்சியடைகிறது. இத்துறை, அதிகரித்த புவியியல் சார்ந்த மற்றும் வர்த்தகப் பன்முகப்படுத்தலை விஸ்தரிப்பதுடன், அதன் வர்த்தகப் பெயரை வலுப்படுத்துவதற்கும், முக்கியமான துறைகளில் நுகர்வோரை நோக்கிய விரிவான உறவுகளையும் ஏற்படுத்துகிறது.

### சுத்திகரிப்பு

சுத்திகரிப்புத் துறை, முறையே 84% மற்றும் 78% ஆக வருமான மற்றும் வரிக்கு முன்னரான இலாபம் என்பவற்றைக் காட்டியது. வரிக்கு முன்னரான இலாபம் ரூபா 8.25 பில்லியனாகும். ஐக்கிய அமெரிக்க இராச்சியத்தில் தொடர்ச்சியாக ஏற்பட்ட வளர்ச்சியினால் இச்செயற்பாடு உந்தப்பட்டது. மேலும், அதிஉயர் பெறுமதி சேர்க்கப்பட்ட தயாரிப்புகளின் அதிகரிப்பும் இதற்குக் காரணமாகும். மேலும், இத்துறை சிரட்டையை மூலப்பொருளாகக் கொண்டு தயாரிகப்படும் காபன் மூலமாக உற்பத்தி செய்யப்படும் பொருட்களில் உலகளவில் முன்னிலை வகித்து, தனது சந்தை நிலையை நிலைநிறுத்தியுள்ளது.

வினைத்திறனான திட்டமிடல் மற்றும் தயாரிப்புப் பொருட்களை உரிய நேரத்தில் கொள்முதல் செய்தல் மற்றும் எண்ணெய் கையிருப்பு என்பன விநியோக சங்கிலியில் ஏற்பட்ட இடையூறுகள், போக்குவரத்துத் தடைகள் என்பனவற்றைத் தாண்டி, இத்துறை நெகிழ்வுடையதாக இருக்க வழி வகுத்தது. இதன் மூலம், இடையூறு அற்ற தொழிற்பாடுகள் தொடர்ந்து இடம்பெற்றன. பேணப்பட்ட விரிவான விநியோகத்தருடனான உறவுகள் தொடர்ந்து தயாரிப்புக்குத் தேவையான மூலப் பொருட்களை எவ்வித தடையும் இன்றி இவ்வருடத்தின் போது கொள்வனவு செய்யக்கூடியதாக இருந்தது. இத்துறை, தொடர்ந்து பெறுமதி சேர்க்கப்பட்ட வலு கையிருப்பு, காபன்கள் மற்றும் முதன்மை தரம் வாய்ந்த தயாரிப்புக்கள் என்பனவற்றை விருத்தி செய்வதற்கு தெளிவான பாதைகளை உருவாக்கியுள்ளது. இது, பல்வேறுபட்ட உயர்தர தயாரிப்புகளை விநியோகிப்பதற்கு வழியமைக்கிறது.

அதிகரிக்கப்பட்ட வாயு மற்றும் நீர் துய்மைப் படுத்தல் தொடர்பான தீர்வுகளுக்கு உலகளாவிய ரீதியில் இயக்கப்பட்ட காபனுக்குத் தேவையான மாறுபட்ட சாதகமான கேள்வி மற்றும் கடுமையான சுற்றாடல் ஒழுங்கு விதிகள் என்பன இத்துறையை வலுவான இடத்தில் தக்க வைத்துள்ளது. புதிய தயாரிப்புக்களை மேம்படுத்துவது தொடர்பிலும், உற்பத்தித் திறன்களை விருத்தி செய்வதற்கும் அண்மைக் காலத்தில் ஏற்படுத்தப்பட்ட முதலீடுகள், மக்களையும், தலைமைத்துவ அபிவிருத்தியையும் நோக்கியதாக அமைந்துள்ளது. இது, பெறுமதி சேர்க்கப்பட்ட தயாரிப்புகளுக்கு இருக்கக்கூடிய அதிகரித்து வரும் கேள்வியை முதலீடு செய்வதற்கு Haycarb க்கு வழி வகுத்தது.

### பெருந்தோட்டங்கள்

தலவாக்கலை ரீ எஸ்டேட் பீஎல்சி மற்றும் களனிவெலி பிளான்டேஷன்ஸ் பீஎல்சி ஆகிய குழுமத்தின் பிராந்தியப் பெருந்தோட்ட நிறுவனங்கள், தேயிலைக் கைத்தொழிலில் தமது அதிகூடிய இலாபத்தன்மை மற்றும் தரத்தை மையப்படுத்திய கம்பனிகளாக தமது நிலையைப் பேணி வந்துள்ளன. மேலும், ஏல விற்பனையின் பொது, தேயிலைக்கான அதி கூடிய விலையைப் பெறும் முன்னணி நிறுவனங்களாகவும் அவை, தம்மை தக்கவைத்துக் கொண்டுள்ளன. உர இரசாயனப் பொருட்களின் நீண்டகால தடையினால் ஏற்பட்ட பாதிப்புக்கள் மற்றும் உள்ளீடுகளின் விலையில் ஏற்பட்ட பாரிய அதிகரிப்பு, எரிபொருள் பற்றாக்குறைகள் போன்ற சிரமங்கள் இருந்த போதிலும், இத்துறை முறையே 65% வருவாயையும், 136% வரிக்கு முன்னரான இலாபத்தையும் பதிவு செய்துள்ளது.

பயோன்ட் தேயிலை (Buoyant tea) விலைகள் குறிப்பிட்ட துறையின் இலாபத்தன்மைக்கு பங்களிப்புச் செய்த அதேவேளை, அதிகமாக வருவாயை ஈட்டுகின்ற, உற்பத்தித் திறன் மீதான, தொடர்ந்து செல்லும் மேம்படுத்தல்களில் செலுத்தப்படும் கவனம் மற்றும் துல்லியமான

#### கட்டுமாணப் பொருட்கள்

**மூலோபாய அவதானம்**

ஏற்றுமதி சந்தை வளர்ச்சி
புதிய தயாரிப்புகளின் கண்டுபிடிப்பு
வினைத்திறன் மற்றும் விலை முகாமைத்துவம்

| | |
|---|---|
| வருமானம் | +6% |
| EBIT | -18% |
| PBT | -89% |
| மொத்த சொத்துக்கள் | -13% |
| பொருளாதார பெறுமதி உருவாக்கம் | +37% |
| காபன் தடப் பதிவு | -30% |

#### பெருந்தோட்டங்கள்

**மூலோபாய அவதானம்**

வள உச்சப் பயன்பாடு
மீள் உற்பத்தி விவசாயம்
தரத்திற்கான அர்ப்பணிப்பு

| | |
|---|---|
| வருமானம் | +65% |
| EBIT | +125% |
| PBT | +136% |
| மொத்த சொத்துக்கள் | +57% |
| பொருளாதார பெறுமதி உருவாக்கம் | +47% |
| காபன் தடப் பதிவு | -4% |

#### விவசாயம்

**மூலோபாய அவதானம்**

வினைதிறனான தொழிற்படு மூலதன முகாமைத்துவம்
புதிய தயாரிப்புகள்
முதன்மை உறவுகளைப் பேணுதல்

| | |
|---|---|
| வருமானம் | +37% |
| EBIT | +145% |
| PBT | +118% |
| மொத்த சொத்துக்கள் | +2% |
| பொருளாதார பெறுமதி உருவாக்கம் | +60% |
| காபன் தடப் பதிவு | -2% |

#### நுகர்வோர் மற்றும் சில்லறை

**மூலோபாய அவதானம்**

முன்னேற்றகரமான சரக்கிருப்பு முகாமைத்துவம்
நுகர்வோரை மையப்படுத்திய கவனம்
உற்பத்தி மற்றும் விநியோக சங்கிலியின் சிறப்பு

| | |
|---|---|
| வருமானம் | -24% |
| EBIT | -12% |
| PBT | -88% |
| மொத்த சொத்துக்கள் | -11% |
| பொருளாதார பெறுமதி உருவாக்கம் | -5% |
| காபன் தடப் பதிவு | -4% |

# தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரியின் பிரதிபலிப்புக்கள்

விவசாய உபாய நுட்பங்கள் என்பவற்றின் மீதான அவதானம் என்பன விவசாய உள்ளீடுகளின் அதிஉச்ச பயன்பாட்டை உறுதிப்படுத்தி, இலாபத் தன்மையையும், தரத்தையும் பேணுவதற்கு உதவியுள்ளது. தொழிற்பாட்டு வலயத்திற்குள் சவால்கள் அதிகரித்ததன் காரணமாக, இக்குறிப்பிட்ட துறை எரிபொருள் கையிருப்புகள் மற்றும் உள்ளீட்டுப் பொருட்கள் என்பவற்றின் இருப்பைத் தக்கவைத்துக்கொள்ள துரித நடவடிக்கைகளை மேற்கொண்டதன் காரணமாக, அனைத்துப் பெருந்தோட்டங்களும் இடையூறுகள் இன்றி தொடர்ந்து தொழிற்பட்டன. தொழிலாளர்களையும், தோட்ட சமூகங்களையும் பாதுகாப்பதற்காக, ஒரு தொகையான நிவாரண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டமைக்கு மேலதிகமாக, இத்துறை சம்பளமற்ற வருவாய், பங்கீட்டு மாதிரி மற்றும் கைகளினால் களை பிடுங்கும் நிகழ்ச்சிகள் போன்றவற்றை தோட்டத் தொழிலாளர்களுக்கு, மேலதிக வருமானம் பெறும் வழிகளாக ஏற்படுத்திக் கொடுத்தன. மெப்ரொக் ரீ நிறுவனமும் பெருந்தொகையான தேயிலை விநியோகம் மற்றும் உயர் விழிம்பு சந்தைகளில் ஊடுருவலை அதிகரிப்பதன் மூலம் உயர்மட்ட வளர்ச்சியைப் பதிவு செய்தது. எனினும், நிதி வருடத்தின் இறுதிப் பகுதியில் அமெரிக்க டொலருக்கு எதிராக இலங்கை ரூபாவில் ஏற்பட்ட வீழ்ச்சி மற்றும் தீவிர விலைப் போட்டி காரணமாக இலாபத் தன்மையில் பாதிப்பை ஏற்படுத்தியது.

பெருந்தொகையான தேயிலையைக் கொள்வனவு செய்யும் சந்தைகளில் மாறுபட்ட கேள்வி, புவியியல், அரசியல் காரணிகள் மற்றும் தொடர்ந்து நிலைத்திருக்கின்ற நிச்சயமற்ற தன்மைகள் எவ்வாறு அமைந்திருந்த போதிலும், 2023 இல் நாட்டின் தேயிலை உற்பத்தி மீட்சிபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. உற்பத்திச் செலவில் ஏற்படும் அதிகரிப்பும், ஒரு பாரதூரமான சவாலாக தொடர்ந்து இருந்து வருகிறது. இது, உலக சந்தைகளில் நாட்டின் போட்டித் தன்மையைப் பாதிக்கும் சாத்தியம் உள்ளது. இந்தப் பின்னணியில், குழுமத்தின் பெருந்தோட்டத்துறை இந்த முக்கியமான கைத்தொழில் துறையின் நீண்டகால நிலை நிறுத்தத்திற்கு ஒத்துழைப்பு வழங்குவதற்கும், அதன் வியாபாரப் பெயரை வலுவாகப் பேணிப் பாதுகாக்கவும், தொடர்ந்து நிலையான தீர்வுகளை மேற்கொண்டு வருகிறது. மேலும், நிலையான நடைமுறைகள், நீண்டகால வளர்ச்சியை நோக்கிய தரம் என்பவற்றிலும் கவனம் செலுத்தப்படுகிறது. இத்துறையில் நாம் மேற்கொண்ட முதலீடுகள், நீண்டகால பயனை அளிக்கும். அத்துடன், தொடர்ந்து உற்பத்தித் திறனை விரிவாக்கவும், முதலீடுகளை தக்க வைத்துக் கொள்வதை உறுதிப்படுத்திக் கொள்வதற்கும், பிராந்திய பெருந்தோட்ட நிறுவனங்களுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்பட்டுள்ள குத்தகைக் காலம் நீடிக்கப்படும் எனவும் நாம் எதிர்பார்க்கின்றோம். இந்த நடவடிக்கை, உலக தேயிலைச் சந்தையில் போட்டித்தன்மையாக திகழ்வதற்கு அத்தியாவசியமாகும்.

### கைகளின் பாதுகாப்பு

உலக சந்தையில் கேள்விகள் குறைவடைந்த போதிலும், கைகளைப் பாதுகாக்கும் துறை இவ்வருடத்தின் போது 36% வருவாய் வளர்ச்சியை வெளிப்படுத்தியதோடு, உயர் பெறுமதி சேர்க்கப்பட்ட தயாரிப்புகளில் இருந்து பங்களிப்புகளை அதிகரிக்க மூலோபாய நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது. மேலும், இத்துறை, செயன்முறை வினைத்திறன்கள், வினைத்திறனான விலை முகாமைத்துவம் என்பவற்றில் உரிய கவனம் செலுத்துவதோடு, இது, இலாபத் தன்மையை உறுதிப்படுத்தியது. கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில், வரிக்கு முன்னரான இலாபம், 5% ஆல் அதிகரிக்கப்பட்டு, ரூபா 5.25 பில்லியனாக பதிவு செய்யப்பட்டது. இலாபத் தன்மையில் ஏற்பட்ட மந்தமான வளர்ச்சி, ஐரோப்பிய நாடுகளில் உள்ள தொழிற்பாடுகளில் இருந்து பெறப்பட்ட பாதகமான வருவாய்களைப் பிரதிபலிக்கிறது. இது, மந்தகதியில் சென்ற கேள்வி மற்றும் கடந்த இரண்டு வருடங்களில் ஏற்பட்ட படிப்படியான விலை வீழ்ச்சி என்பவற்றினால் பாதிக்கப்பட்டது.

இத்துறையில் விளையாட்டுத்துறை சார்ந்த தரம் வாய்ந்த விளையாட்டுக் கையுறைகள் “DPL ஸ்போர்ட்ஸ்” என்பதன் மூலம் ஆரம்பிக்கப்பட்டு, அமெரிக்க உதை பந்தாட்டம், சைக்கிளோட்டம், யோகா மற்றும் குதிரையோட்டம் என்பவற்றுக்கு இக்கையுறைகள் வழங்கப்பட்டன. முதன் முதலாக, ஐரோப்பாவில் ஜுலை மாதம் ஆரம்பிக்கப்பட்ட போது, ஆரம்பக் கட்ட தேவை மிகவும் கவர்ச்சிகரமாக இருந்ததோடு, இப்புதிய தயாரிப்பு, அதிகமான சந்தை வாய்ப்புகளை அளிக்குமென நாம் ஆர்வமுடன் எதிர்பார்க்கின்றோம். இவ்வருடத்தின் போது, இத்துறை DPL பிரான்ஸ் என்பதை ஐரோப்பாவில் ஸ்தாபித்ததன் மூலம், தமது பிரசன்னத்தை விரிவாக்கியது. இதற்காக பிரான்ஸில் உள்ள வர்த்தகக் கம்பனி ஒன்று கையகப்படுத்தப்பட்டது. இத்துறை கையகப்படுத்தப்பட்டதோடு, போலந்திலும் வர்த்தகம் ஆரம்பிக்கப்பட்டது. தற்போது ஐரோப்பாவில், ஐரோப்பிய ஆர்ம் ICOGUANTI S.p.A. என்ற துணைக் கம்பனிகளின் தொகுப்பை உருவாக்கியது.

உலகப் பொருளாதார நடவடிக்கையின் மந்தகதி காரணமாக, குறுங்காலத்தில் கையுறைகளுக்கான உலகளாவிய கேள்வி குறையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. எனினும், எமது மூலோபாய தலையீடுகளின் மூலம், நடுத்தர காலம் தொடக்கம், நீண்டகாலத்தில் இக் குறிப்பிட்ட தயாரிப்பு, பெறுமதி சேர்க்கப்பட்ட வாய்ப்புகளைப் பெறலாம். பாரிய சந்தைகளில் படிப்படியான மீட்சியில் இருந்து எழுகின்ற வாய்ப்புகள், விசேடமாகத் தயாரிக்கப்பட்ட கையுறைகளின் விலையை இத்துறையில் சிறந்த இடத்துக்கு இட்டுச் செல்லும்.

### விவசாயம்

விவசாயத்துறை அசாதாரணமான வளர்ச்சியைக் காட்டியுள்ளது. இது, 37% வருமானத்தையும், 118% வரிக்கு முன்னரான இலாபத்தையும் பதிவு செய்துள்ளது. வரிக்கு முன்னரான இலாபம் ரூபா 5.01 பில்லியனாகும். கணிசமான ஏற்றத் தாழ்வுகளுக்கு மத்தியில், இத்துறை சரக்கிருப்பு முகாமைத்துவம், பங்கீட்டுத் திட்டமிடல், உற்பத்தித் திறன்களின் வலுவாக்கம் என்பவற்றில் மூலோபாய எதிர்வுகூறல்களைக் கொண்டிருந்தமையினால், வலுவான வளர்ச்சியைப் பெறக்கூடியதாக இருந்தது.

#### விளையாட்டு

**மூலோபாய அவதானம்**

தயாரிப்பு வழங்குகையை மேம்படுத்துதல்
மனிதவள உச்ச பயன்பாடு
வருவாய் பன்முகப்படுத்தல்

| | |
|---|---|
| வருமானம் | +96% |
| வட்டிக்கு முன்னரான நட்டம் மற்றும் வரி | -12% |
| வரிக்கு முன்னரான நட்டம் | +43% |
| மொத்த சொத்துக்கள் | +4% |
| பொருளாதார பெறுமதி உருவாக்கம் | -1% |
| காபன் தடப் பதிவு | +26% |

#### கைத்தொழில் உள்ளீடுகள் சக்தி மற்றும் வலு

**மூலோபாய அவதானம்**

ஏற்றுமதி சார்ந்த வர்த்தகத்தில் அவதானம்
பிராந்திய விரிவாக்கம்
நிலைத்தன்மையான புதிய கண்டுபிடிப்புகள்

| | |
|---|---|
| வருமானம் | +24% |
| EBIT | +87% |
| PBT | +21% |
| மொத்த சொத்துக்கள் | +4% |
| பொருளாதார பெறுமதி உருவாக்கம் | +69% |
| காபன் தடப் பதிவு | -14% |

#### போக்குவரத்தும் தளவாடங்களும்

**மூலோபாய அவதானம்**

சர்வதேச பிரசன்னத்தை விரிவாக்கல்
தலைமைத்துவ தகைமைகளை உயர்த்துதல்
அட்வான்டிஸின் தயாரிப்புக் கோப்புறையை வலுப்படுத்தல்

| | |
|---|---|
| வருமானம் | +94% |
| EBIT | +87% |
| PBT | +38% |
| மொத்த சொத்துக்கள் | +3% |
| பொருளாதார பெறுமதி உருவாக்கம் | +58% |
| காபன் தடப் பதிவு | -26% |

#### ஏனையவை

**மூலோபாய அவதானம்**

பென்டன்ஸ்: சூரிய ஒளி உற்பத்தியில் வளர்ச்சி
HBSIL: புதிய சந்தைகளும் சேவைகளும்

| | |
|---|---|
| வருமானம் | +46% |
| EBIT | +47% |
| PBT | -14% |
| மொத்த சொத்துக்கள் | +5% |
| பொருளாதார பெறுமதி உருவாக்கம் | +34% |
| காபன் தடப் பதிவு | +26% |

கைத்தொழில் துறையில் ஏற்பட்ட மாறுபட்ட விடயங்கள், ஏற்றத் தாழ்வுகள் உள்ளதான கேள்வி எவ்வாறு இருந்த போதிலும், இத்துறை தமது வர்த்தகப் பெயர்களில் நிலையான இடத்தைப் பிடித்ததுடன், அதன் சர்வதேச பங்குதாரர்களுடன் நம்பகத்தன்மையையும் பாதுகாத்துள்ளது.

இத்துறையின் செயற்பாடு, உரக் கைத்தொழில் துறை மூலம் நிலைநிறுத்தப்பட்டது. இத்துறை தொடர்ச்சியாக, சரக்கிருப்பைப் பேணுவதற்குத் தேவையான தொழிற்படு மூலதனச் சுழற்சிகளை வினைத்திறனாகப் பாதுகாத்தது. புதிய இரண்டு வகையான நெல், உர வகைகள் அறிமுகப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து, பயிர் பாதுகாப்பும் இவ்வருவாயை ஈட்டுவதற்கு முக்கிய பங்குதாரராக இருந்தது. இத்துறை, பங்களாதேஷிலும் தனது போட்டித்தன்மையை வலுவாக நிலைநிறுத்தியது. இதற்குக் காரணம், பங்கீட்டுத் தகைமைகளை வலுப்படுத்துவதன் ஊடாக உற்பத்திக் கையிருப்பை மேம்படுத்துவதற்கு முன்னேற்றமான நடவடிக்கைகள் உதவின. ஏற்றுமதித் துறைகளைப் பொறுத்தவரை, தோட்டக் கலை மற்றும் உணவு வகைகள் வளர்ச்சியைப் பதிவு செய்தன. இவ்வளர்ச்சிக்கு காரணம், உற்பத்தித் திறன் நிலைகள் மற்றும் புதிய நுகர்வோர் அறிமுகம் என்பனவாகும்.

மேம்பட்டு வரும் அந்நியச் செலாவணி, திரவத்தன்மை நிலைமைகள், உலகளாவிய ரீதியில் நுகர்வுப் பொருட்களின் படிப்படியான விலைக் குறைப்பு, குறைவடைந்து வருகின்ற வட்டி விகிதங்கள் என்பவற்றின் மூலம், நாட்டின் விவசாயத்துறை மீட்சியை நோக்கிச் செல்கிறது. எமது தயாரிப்புகள் தொடர்பில், மேலதிகமாக பன்முகப்படுத்தலை எதிர்பார்ப்பதுடன், எமது ஏற்றுமதி வர்த்தகத்தில் அதிகரித்த ஊடுருவலும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. ஹேலீஸ் உடைய விவசாயம், அதன் வெளிவாரி பயிர்ச் செய்கையாளர்களின் எக்கோ முறைமை மற்றும் அவர்களின் பொருளாதார மேம்பாட்டிற்கு உதவியளிக்கும் பங்குதாரர்கள் மற்றும் குறிப்பிட்ட துறையினரின் நீண்டகால நிலைத்தன்மை ஆகியவற்றை நோக்கி தொடர்ந்து பணிபுரியும்.

### ஆடை தயாரிப்புக் கைத்தொழில்

ஆடை தயாரிப்புக் கைத்தொழில் துறையின் வர்த்தகப் பெயரை மையப்படுத்திய மூலோபாயம், இக்காலப்பகுதியின் போது அதிகமான பங்குலாபங்களை ஈட்டிக் கொடுத்துள்ளது. இதன் மூலம் 90% ஆன வருமானம் கிடைக்கப் பெற்றது. இத்தொகை ரூபா 60.01 பில்லியன் ஆகும். மேலும், முக்கியமான இலாபம், கலப்புத் தயாரிப்புப் பொருட்களின் மூலமாகவும், உற்பத்தித் திறன் மற்றும் வினைத்திறன்கள் மீதான தொடர்ந்து முன்னெடுக்கப்படும் அவதானம் என்பன காரணமாக இருந்தன. இவற்றின் மூலம், இத்துறை, அதன் தொழிற்படு இலாப விழிம்புகளை விரிவுபடுத்துவதன் மூலம், இக்காலப் பகுதியின் போது எண்ணெய் வலு மற்றும் உள்ளீட்டுச் செலவுகள் தீவிரமாக அதிகரித்த போதிலும், ஒரு நம்பகரமான அடைவை எட்டியது. எனினும், இக்காலப்பகுதியின் போது, வட்டி வீதங்களில் ஏற்பட்ட தீவிர அதிகரிப்பு, கடந்த வருட அந்நியச் செலாவனி பெறுவனவுகளின் இயல்பாக்கம் காரணமாக, வரிக்கு முந்திய இலாபம் பாதிப்படைந்தது. இந்த வருடத்தின் போது, வரிக்கு முந்திய இலாபம் 5% ஆல் வீழ்ச்சியடைந்திருந்தது.

நாட்டின் சமூக, பொருளாதார சவால்கள் மற்றும் அரசியல் ஸ்திரமற்ற தன்மை என்பவற்றுடன் தொடர்புடைய, பாதகமான சர்வதேச பிரசாரம், இத்துறையை மிகவும் கவனமாகவும், ஆழமான ஈடுபாட்டுடனும், உலகளவிலான வர்த்தகப் பெயரைத் தக்க வைத்துக் கொள்வதற்கும் இப்பாதகமான தோற்றப்பாடுகளை நீக்க வேண்டியிருந்ததுடன், உரிய நேரத்தில் விநியோகம் மேற்கொள்ளப்படுவதை உறுதி செய்ய கட்டாயப்படுத்தியது. புதிய கண்டுபிடிப்புகள் தொடர்ந்தும் முக்கியமான ஒன்றாக இருந்ததுடன், இத்துறை INNO எனும் வியாபாரப் பெயரை ஊடுருவுவதற்கு தேவையான பாதையை உருவாக்கிய அதேவேளை, உரிய நேரத்திலான தீர்வுகளையும் வழங்கியது. இவை, மீள் சுழற்சி செய்யப்பட்ட நூல்களினால் உருவாக்கப்பட்ட இயற்கை சாயம் மற்றும் வர்ணங்களை உள்ளடக்கியது. இக்கண்டுபிடிப்புகள், சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்டு, பெறுமதிமிக்க விருதுகளையும் பெற்றன.

பணவீக்க அழுத்தங்கள், பொருளாதார நிச்சயமற்ற தன்மை என்பன தவிர்க்க முடியாத வகையில் கேள்வியில் மந்தகதியை உருவாக்கியதனால், உலகளாவிய புடவை மற்றும் ஆடை தயாரிப்புக் கைத்தொழில் துறையின் தோற்றப்பாடு 2023 இல் மிளிரவில்லை. இத்தகைய சூழ்நிலைகளில் ஆடை தயாரிப்புக் கைத்தொழில்துறை புதிய தொழிற்படு மாதிரிகளைக் கைக்கொள்ளுதல், விநியோக சங்கிலிகளை அதிகரித்தல் மற்றும் காலநிலையினால் ஏற்படும் சவால்களுக்கு உரிய சந்தைப்படுத்தல் முயற்சிகளை மேற்கொள்ளல் என்பனவற்றின் மீது கவனம் செலுத்துகிறது. இக்கைத்தொழில் துறை, அண்மைக் காலங்களில், ஏற்றுக்கொள்ளப்பட்ட வர்த்தகப் பெயரை மையமாகக் கொண்ட மூலோபாயத்தின் மீது தொடர்ந்தும் கவனம் செலுத்துவதோடு, நுகர்வோருக்குத் தேவையான வடிவங்களுக்கு மாற்றுதல், நிலையாதார உற்பத்தி மற்றும் தயாரிப்பு, வடிவமைப்பு மற்றும் புதிய கண்டுபிடிப்பு ஆகியவற்றுக்கான சந்தர்ப்பங்களை தேடிக்கொள்ளும்.

### Eco தீர்வுகள்

இந்த வருடத்தின் போது, Eco தீர்வுகள் துறை 37% வருமானத்தையும், 50% வரிக்கு முன்னரான இலாபத்தையும் பதிவு செய்தது. இந்த வெற்றி, பாரம்பரியமற்ற சந்தைகள் மற்றும் செயன்முறை வினைத்திறன் மீதான மூலோபாய அழுத்தம் ஆகியவற்றினால் கிடைக்கப் பெற்றது. இத்துறை, தொடர்ந்து கண்காட்சிகள் மற்றும் வர்த்தக சந்தைகளில் கிரமமாக பங்குபற்றுவதன் மூலம், வட ஆபிரிக்கா மற்றும் யுரேஷியா ஆகிய இடங்களில் புதிய சந்தைகள் மூலம் நுகர்வோரின் ஊடுருவலை அதிகரித்துக் கொண்டது. தயாரிப்புப் பொருட்களைப் பொறுத்த வரையில், மெத்தைகள், பாராட்டக்கத்த கேள்வியை உருவாக்கியதுடன், தூரிகைகள் மற்றும் நில விரிப்புகள் என்பன, ஏற்றத்தாழ்வுடனான கேள்வி நிலைமைகள் மூலம் பாதிக்கப்பட்டன.

இத்துறை, மெத்தைகள் மற்றும் பயிர் வளர்க்கும் உறைகள் என்பவற்றைத் தயாரிப்பதற்கான தகைமையை விரிவாக்குவதற்கு, ரூபா 500 மில்லியனை முதலீடு செய்தது. இதன் மூலம், அதன் உற்பத்தித் திறன்களை தொடர்ந்து வலுவாக்குகிறது. மேலும், இத்துறை பின்னடைவைப் பெற்ற அதன் ஒருங்கினைப்பை தொடர்ந்து விரிவாக்குவதன் மூலம், அதன் தயாரிப்பு மூலப்பொருட்கள், விநியோகப் பாதுகாப்பை மேலும் வலுப்படுத்துகிறது. இத்துறையில் நீண்டகால மாறுபட்ட கேள்விகள் எமக்கு சாதகமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. குறிப்பாக, வளர்ந்து வரும் ஊடகம், மண்ணரிப்புக் கட்டுப்பாடு, தோட்டக் கலை என்பனவாகும். இத்துறை தொடர்ந்து பாரம்பரியமற்ற சந்தைகளின் ஊடுருவலை அதிகரிக்க எதிர்பார்க்கும் அதேவேளை, புதிய தயாரிப்பு, பாவனைகளுக்கான சந்தை விருத்திகளையும் விரிவாக்கும்.

### கைத்தொழில் உள்ளீடுகள், சக்தி மற்றும் வலு

இவ்வருடத்தின் போது, இத்துறை, சவால்களுக்கு மத்தியிலும், பாராட்டத்தக்க வகையில், 24% வருமானத்தையும், 21% வரிக்கு முன்னரான இலாபத்தையும் பதிவு செய்தது. இக்குறிப்பிட்ட பெறுபேறு, கைத்தொழில் உள்ளீடு, உப துறை மாலைதீவு மற்றும் பங்களாதேஷ் ஆகிய நாடுகளில் விரிவாக்கப்பட்டதன் மூலமாகப் பெறப்பட்டன. இவ்விரிவாக்கம், கைத்தொழிலுக்குத் தேவையான பொருட்கள், உயிரியல் விஞ்ஞானம் மற்றும் பொறியியல் உட்பட பல தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டன. கைத்தொழில் துறைக்குத் தேவையான தயாரிப்பு மூலப்பொருட்கள் தொடர்பில் இத்துறை, ஏற்றுமதி சார்ந்த வர்த்தகத்தை விரிவுபடுத்தி, இறப்பர் மற்றும் பிளாஸ்ரிக் கைத்தொழில் துறையில் புதிய நுகர்வோரை அதிகரித்துக் கொண்டது. மறுபுறத்தில் பொருத்தமான வரிகள் மீது மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள் காரணமாக, சக்தி மற்றும் வலுத்துறை, வரிக்கு முன்னரான இலாபத்தில் சுமார் 34% வீழ்ச்சியைக் காட்டி, ரூபா 539.30 மில்லியனை பதிவு செய்தது.

இலங்கையில் கைத்தொழிற் செயற்பாடுகள் மீட்சி பெற்று வரும் இவ்வேளையில், கைத்தொழில்களுக்கான உள்ளீடுகளின் கேள்வி, குறுகிய காலத்தில் குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது. எனினும், அதிகூடிய, சாத்தியமான, பாரிய பொருளதார தோற்றப்பாடு ஏற்படும் சூழ்நிலை தென்படுவதனால், நடுத்தர காலப்பகுதியில், முன்னேற்றம் ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. மூலோபாய அடிப்படையில் இந்த உப துறை பிராந்திய ரீதியில் தனது பிரசன்னத்தைத் தொடர்ந்து அதிகரிக்கும் அதேவேளை, அதன் தயாரிப்புக் கோப்புறையில் புதிய பொருட்களை அறிமுகப்படுத்தும். சக்தி மற்றும் வலு துறையில் அரசாங்கத்தின் மீள் புதுப்பிக்கக்கூடிய வலு மீதான அதிகரித்து வரும் நம்பிக்கை, இத்துறையில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியான சூழ்நிலைகளை ஏற்படுத்தும்.

### நுகர்வோர் மற்றும் சில்லறை

இவ்வருடத்தில் பல எண்ணிக்கையான ஒன்றிணைந்த சவால்கள் ஏற்பட்டதன் காரணமாக

# தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரியின் பிரதிபலிப்புக்கள்

நுகர்வோர் மற்றும் சில்லறைத் துறை சாதகமற்ற கேள்விகளைக் கொண்டிருந்தன. மாறுபட்ட விநியோகம் காரணமாக, அதன் வருமானம் 24% ஆல் வீழ்ச்சியடைந்தது. இலங்கை ரூபாவின் தீவிரமான தேய்மானம், இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் மீது விலை அதிகரிப்பை ஏற்படுத்தியதுடன், நுகர்வோரின் கொள்வனவு சக்தியும் வீழ்ச்சியடைந்தது. இப்பொருட்களின் கொள்வனவு இயல்பு காரணமாக, அதன் கேள்வியில் தாக்கம் ஏற்பட்டது. சரக்கிருப்பு பேணுவதற்கான சுழற்சி நீடிக்கப்பட்டதனால் உயர் வட்டி விகித சூழ்நிலை துறையின் கொள்வனவு செலவில் அதிகரிப்பை ஏற்படுத்தியது. இதன் விளைவாக, வரிக்கு முந்திய இலாபம் 88% ஆல் வீழ்ச்சியடைந்து இவ்வருடத்தில் ரூபா 690.81 மில்லியனாகப் பதிவு செய்யப்பட்டது.

சிங்கர் அதன் நிலையை எவ்வித இடையூறும் இன்றி சந்தை முன்னணியாளராக வைத்துக் கொண்டது. அதன் தயாரிப்புத் தொகை, விரிவாக்கப்பட்ட புவியியல் பிரசன்னம் மற்றும் வலுவான வியாபாரப் பெயர் என்பன இவ்விடத்தைப் பெற்றுக்கொள்ள வழிசமைத்தன. சிங்கர், தொடர்ந்து நாட்டின் முக்கிய முன்னணி வகிக்கும் வியாபாரப் பெயராக அங்கீகரிக்கப்பட்டிருப்பதோடு, 2023 இல் நடைபெற்ற SLIM-KANTAR மக்கள் விருதுகளில் இவ்வருடத்திற்காக 17வது தடவையாகவும் விருதைப் பெற்றுக்கொண்டது.

புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட வரிக்கொள்கை மற்றும் செலவிடக்கூடிய வருமானத்தின் மீதான அதன் பாதிப்பு என்பன, நாட்டின் நுகர்வோர் கைத்தொழில் துறை மீது அழுத்தங்களை ஏற்படுத்தின. பாரிய பொருளாதார சூழ்நிலைகளின் எதிர்பார்க்கப்பட்ட மீட்சியுடன் வருடத்தின் இரண்டாவது பகுதியில் கேள்வி நிலைமைகளை படிப்படியாக உயர்த்த எதிர்பார்க்கின்றோம். குறுகிய காலத்தில் நடைமுறையில் உள்ள இருப்புகள் மட்டத்தை தீவிரமான விற்பனைகள் மூலம் சிங்கர் உச்ச பயன்பாட்டை அடையும் எனவும், நடுத்தர தொடக்கம் நீண்டகால நிகழ்ச்சி நிரலில் அதன் அனைத்து இடங்களிலும் நுகர்வோருக்கு சிறந்த அனுபவத்தை வழங்குவதன் மூலம் உலக தரம்வாய்ந்த வர்த்தகப் பெயராக சிங்கரைக் கட்டியெழுப்ப எதிர்பார்க்கின்றோம்.

### ஓய்வு நேரம்

இலங்கையின் விருந்தோம்பல் துறை, நாட்டின் பொருளாதார நெருக்கடி, சமூக அமைதியின்மை, அரசியல் ஸ்திரமற்ற தன்மை என்பனவற்றின் காரணமாக, உல்லாசப் பிரயாணிகளின் வருகையில் தீவிர வீழ்ச்சியை எதிர்நோக்கியதன் காரணமாக, நான்காவது வருடத்திலும் அது தோல்வியைச் சந்தித்தது. மேலும், திறன்வாய்ந்த ஆளணியின் கடல் கடந்த புலம்பெயர்வு அதிகரித்தன் காரணமாக, திறமை வாய்ந்த தொழிலாளர்களின் இழப்பும் இக்கைத்தொழில் துறையின் பாதிப்புக்குக் காரணமாக அமைந்தது. இதன் பின்னணியில், ஐந்து நட்சத்திர சிற்றி ஹோட்டல், கிங்ஸ்பரி, மற்றும் அமாயா ஹோட்டல் வலையமைப்புகள் என்பன தமது நிலையை நிறுத்திக் கொள்வதற்கு உள்நாட்டுப் பிரயாணிகளில் தங்கியிருக்க வேண்டியிருந்ததோடு, அதன் F&D யை மேம்படுத்தியது. இத்துறையின் கீழ், இத்தகைய நிலைமைகள் இருந்த போதிலும், வருவாயில் 96% வளர்ச்சியைப் பதிவு செய்த அதேவேளை, செலவுகளைப் பேணவும், உற்பத்தித்திறனை அதிகரிக்கவும் அதிக செலவு ஏற்பட்டது. எவ்வாறாயினும், வரிக்கு முந்திய நட்டம், 4.3% ஆல் அதிகரித்து, ரூபா 2.43 பில்லியனாக அதிகரித்தது. இதற்குரிய காரணம், வட்டி வீதங்களில் ஏற்பட்ட தீவிரமான அதிகரிப்பு மற்றும் நிதிச் செலவினங்களின் இரட்டிப்புத் தன்மை என்பனவாகும்.

இறுதி சில வருடங்களில் கிங்ஸ்பரி மற்றும் அமாயா ஹோட்டல் வலையமைப்பு வாடிக்கையாளரின் அனுபவத்தை மேம்படுத்துவதற்காக, பொருட்கள் மற்றும் சேவைகள் வழங்குவதை வலுப்படுத்துவதன் மூலம், வாடிக்கையாளர் திருப்தியுறு மட்டங்களில் தொடர்ச்சியான முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

இறுதி சில மாதங்களாக, நாட்டிற்கு வருகைதரும் உல்லாசப் பிரயாணிகளின் எண்ணிக்கை அதிகரித்தமையினால், இக்கைத்தொழில் துறை மீட்சி பெறுவதற்கான அறிகுறிகளைக் காட்டுகிறது. குழுமத்தின் ஓய்வுத்துறை, மக்கள் மற்றும் உற்பத்தித் திறன்களில் முதலீடுகளை வலுப்படுத்தும் முயற்சிகள் ஊடாக எதிர்பார்க்கப்பட்ட மீட்சியில் இருந்து பலன்களைப் பெறுவதற்கான இடத்தில் உள்ளது. இத்துறை, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பிரயாணிகளிடையே ஒரு ஆரோக்கியமான சமநிலையைப் பேணுவதுடன், கூடிய நெகிழ்வு மாதிரியையும் கட்டியெழுப்புகிறது.

### கட்டுமானப் பொருட்கள்

உயர் வட்டி விகிதங்கள், பணவீக்கம், உள்ளீட்டுப் பொருட்களின் விலைகளில் ஏற்பட்ட பற்றாக்குறை, கட்டடப் பொருட்களின் விலை உயர்வு என்பன, கேள்வியைக் குறைத்துள்ளமையினால், நாட்டின் கட்டுமானத்துறை இவ்வருடத்தின் போது மந்தகதியை அடைந்துள்ளது. இத்தகைய வீழ்ச்சி இருந்த போதிலும், அலுமெக்ஸ் நிறுவனம் வருவாயில் 6% அதிகரிப்பைக் காட்டி, ரூபா 10.12 பில்லியனை பதிவு செய்தது. ஏற்றுமதி சந்தைகளில் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளே இந்த வருமானத்திற்குக் காரணமாகும். எனினும், உயர் சரக்கிருப்பு மட்டங்களுக்கு இடையே, அதிகரித்த பெறுவனவுகள், நிதிச் செலவுகளை அதிகரிக்கச் செய்துள்ளதோடு, இலாபத் தன்மையையும் மோசமாகப் பாதித்து, வரிக்கு முன்னரான இலாபத்தை 89% ஆல் வீழ்ச்சியடையச் செய்து, இக்காலப்பகுதியில் ரூபா 153.54 மில்லியனைப் பதிவு செய்தது.

ஏற்றுமதிச் சந்தைகளில் வாய்ப்புகளைத் தேடிக் கொள்வதற்காக, இத்துறை, உள்நாட்டு பாவனைகளில் தீவிரமான குறைப்பை மேற்கொண்டது. மோசமான கைத்தொழில்துறை நிலைமைகள் இருந்த போதிலும், அலுமெக்ஸ் நிறுவனம், தனது உற்பத்தித் திறனை உயர்த்த குறிப்பிடத்தக்களவு முயற்சிகளை மேற்கொண்டு ஓஷோனை ஆரம்பித்தது. இவ்வருடத்தின் போது, இத்துறை, அவுஸ்திரேலியாவின் மிகப்பெரிய உரிமையாண்மை முறையில் உற்பத்தி செய்யும் உரிமையைப் பெற்றுக் கொண்டதுடன், தனது கோப்புறையை மேலும் விரிவாக்கியது.

அண்மைய காலத்தில், கட்டுமாணத்துறை வீழ்ச்சியடையும் என எதிர்பார்க்கப்பட்ட போதிலும், வருடத்தின் இரண்டாவது அரையாண்டில், சந்தை வட்டி விகிதங்களின் வீழ்ச்சி காரணமாக, படிப்படியாக மீட்சி பெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அலுமெக்ஸ், அதன் தயாரிப்பு மற்றும் உற்பத்தித் திறன்களை விரிவாக்குவதன் மூலம், கட்டுமானத்துறையில் மீட்சி பெறுவதற்கான வலுவான நிலையில் உள்ளது. மூலோபாய அழுத்தமும், உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைகளில் அதிகரிக்கப்படும். அதேவேளை, உற்பத்திக் கோப்புறையை விரிவாக்குவதற்கான செயற்பாடுகளும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

### ஏனையவை

குழுமத்தின் ஏனைய துறைகளாவன - பென்டன்ஸ் குரூப், ஹேலீஸ் பிஸ்னஸ் சொலூஷ சன்ஸ் இன்டர்நஷனல் லிமிட்டெட் (HBSIL) மற்றும் குரூப் சேர்விசஸ் ஓப் ஹேலீஸ் பீஎல்சி என்பனவற்றை உள்ளடக்குகிறது. இத்துறை, இவ்வருடத்தின் போது, வருமானத்தில் 46% வளர்ச்சியைக் காட்டியது. வருடத்தின் இரண்டாவது அரையாண்டு காலத்தின் போது, பென்டன்ஸ் நிறுவனத்தின் மீட்சி மற்றும் HBSIL நிறுவனத்தில் ஏற்பட்ட வளர்ச்சி மற்றும் ஹேலீஸ் பீஎல்சி நிறுவனத்தின் ஆரோக்கியமான பங்குலாபம் என்பன இந்த வருமானத்தை ஈட்டிக்கொடுத்துள்ளன. தொழிற்பாட்டு வலயத்தில் இருந்து பல சவால்கள் ஏற்பட்ட போதிலும், பென்டன்ஸ் குழுமம், நாட்டில் அதிகரிக்கப்பட்ட மின்சார துண்டிப்புக்கு மத்தியிலும், சூரிய சக்தி தேவையின் அதிகரிப்புக்கும், சக்தியைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளுக்கும், துரிதமான தீர்வுகளை வழங்குவதன் மூலம், பாராட்டத்தக்க இலாப வளர்ச்சியைக் காட்டியது. பென்டன்ஸ் சூரிய சக்தி தீர்வுகளில், நாட்டின் சந்தைகளில் முன்னணியாளராகத் திகழ்கிறது. அதேவேளை, HBSIL உம் வருமானத்தின் வலுவான வளர்ச்சியையும், சந்தைகள் ஊடாக BPO செயற்பாடுகள் மூலம் இலாபத்தன்மையை அதிகரித்தது. மேலும், டிஜிட்டல் சேவைகள் மூலமும் இலாபம் பெறப்பட்டுள்ளது. அதேவேளை, ஹேலீஷ் பீஎல்சி, அதன் குழும நிறுவனங்களில் இருந்து கிடைக்கப்பெற்ற பங்குலாபங்கள் மூலம், இவ்வருடத்தின் போது, தொழிற்படு இலாபத்தைப் பதிவு செய்தது. ஏனைய துறைகளின் வரிக்குப் பின்னரான இலாபம் 19% ஆல் வீழ்ச்சியடைந்து, ரூபா 3.67 பில்லியனாக பதிவு செய்யப்பட்டது. இதற்குரிய பிரதான காரணம், இவ்வருடத்தின் போது செலுத்தப்பட்ட அதிகரிக்கப்பட்ட வட்டித் தொகைகளாகும்.

### பங்குதாரர் பெறுமதி

குழுமம் இக்காலப்பகுதியின் போது தொடர்ச்சியாக அதன் பங்குதாரர்களுக்கு ஒரு பங்கிற்குரிய விலையான ரூபா 21.80 ஐ வழங்கியது. மேலும், நாம் 2023 மார்ச் மாதம் ஒரு பங்கிற்கு ரூபா 5.35 என்ற இடைக்கால பங்கிலாபத்தையும் வழங்கி, கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் 34% ஆல் பங்குலாபம் அதிகரிக்கப்பட்டது.

ஹேலீஸ் பீஎல்சி யின் பங்கு விலை 2022 ஏப்ரல் மாதம் இருந்த அதன் ஆரம்ப விலையான ரூபா 76.90 இல் இருந்து, ரூபா 151.50 ஆக

அதிகரித்தது. இந்தப் பங்கு, வருட இறுதியில் ரூபா 72.00 ஆக முடிவாக்கப்பட்டது.

### திசைகளின் மாற்றமும் சந்தர்ப்பமும்

எமது நாட்டிற்கு இதுவொரு முக்கியமான தருணமாகும் என நான் கருதுகின்றேன். ஏனெனில், நாம் எமது சமூக, பொருளாதார அபிவிருத்தி மாதிரியை, கூடிய நெகிழ்வுடைய சமத்துவமான மற்றும் நிலையான வளர்ச்சிக்கு மீள் கட்டியெழுப்புவதற்கான சந்தர்ப்பமும் இதுவாகும். பாரிய பொருளாதார ஸ்திரத் தன்மையை மீட்பதற்கு, அண்மையில் ஏற்படுத்தப்பட்ட கொள்கைத் தலையீடுகள் எமது நாட்டை தொழிற்படு இடத்திற்கு இட்டுச் செல்வதுடன், IMF உடைய விரிவாக்கப்பட்ட நிதி வசதியுடன் நாட்டின் பொருளாதாரம் மீட்புப் பாதையை நோக்கிச் செல்கிறது. ஒவ்வொரு மணித்தியாலமும் மிக முக்கியமான தருணமாகும். இங்கு தலைமைத்துவம், பாதிக்கப்பட்டவர்களை தற்போதைய நெருக்கடியில் இருந்து பாதுகாத்தல் மற்றும் பொறுப்புக்கூறல் மற்றும் வெளிப்படைத் தன்மை ஆகியவற்றை சிந்தித்தல் வேண்டும். அரசாங்கத்தின் கூட்டான தியாகங்கள், தனியார்துறை மற்றும் அரச துறையின் நடவடிக்கைகள் என்பன அதிகமாகத் தேவைப்படுகின்ற ஸ்திரத்தன்மை மற்றும் நீண்டகால விரிதிறன் என்பவற்றை அர்ப்பணிப்புடன் மேற்கொள்ள அவசியமாகும் ஒரு நிறுவனம் என்ற வகையில், நாம் நாட்டின் பொருளாதார மீட்பு மற்றும் செழுமைக்கு உதவ விரும்புகிறோம்.

உலகளாவிய வளர்ச்சியும், தோன்றிவரும் புதிய சந்தைகள், பலமிழந்த நுகர்வோரின் தேவைகளைக் கொண்டு வளர்ந்து வரும் பொருளாதாரங்கள், வாழ்க்கைச் செலவுகளின் வீழ்ச்சி மற்றும் சாத்தியமான மூலதன வெளிப்பாய்ச்சல்கள் போன்ற தவிர்க்க முடியாத தாக்கங்களினால் 2023 ஆம் ஆண்டிலும் பாதிப்படையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. எனினும், இலங்கையில் நடுத்தர தொடக்கம் நீண்டகாலத்தில் படிப்படியான முன்னேற்றத்தை அடைவதற்கான பாரிய பொருளாதார அடிப்படைகள் உருவாக்கப்பட்டுள்ளன. வெளியக அழுத்தங்கள் மிதமாக இருப்பதன் மூலமும், விநியோக பக்கத்தில் இயல்பாக ஏற்படும் சூழ்நிலைகளும் காணப்படுவதனால் பணவீக்கத்தின் அழுத்தங்கள் எதிர்வரும் மாதங்களில் படிப்படியாக இலகுபடுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. கடன் மறுசீரமைப்பு விடயங்களுடன் தொடர்புடைய உயர் இடர் கட்டுப்பணத்தின் வீழ்ச்சி, பணவீக்கத்தை இலகுபடுத்தல் என்பவற்றைப் பிரதிபலிக்கக்கூடிய வகையில் படிப்படியாக வட்டி வீதங்களில் வீழ்ச்சி ஏற்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. வெளியகத்துறை நடவடிக்கைகளின் முன்னேற்றம் மற்றும் பாரிய பொருளாதார ஸ்திரத் தன்மையின் மீட்பு என்பவற்றின் மூலம் 2023 இன் பிற்பட்ட காலப்பகுதியில் இலங்கை ரூபாவின் றெுமதி படிப்படியாக ஸ்திரப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஒவ்வொரு நெருக்கடியும், எமக்கு ஒரு புதிய வாய்ப்பை அளிக்கும் எனக் கருதி, இத்தகைய சூழ்நிலைகள் எமக்கு புதிய விடயங்கள் அல்ல என நாம் எண்ணி, எதிர்காலத்தை வெற்றி கொள்ளலாம் என நாம் எதிர்பார்க்க வேண்டும். நெகிழ்வான தலைமைத்துவத்திற்கு நம்பிக்கையும், சாதகமான எதிர்பார்ப்பும் முக்கியம் என நாம் கருதுவதோடு, எமது வளங்கள், தகைமைகள் என்பவற்றை வலுப்படுத்துவதற்கு வலுவான அடித்தளத்தை இட்டுள்ளோம் என நாம் நம்புகிறோம். மேலும், சாத்தியமான அழுத்தங்களின் போது எமது மக்களும், பங்குதாரர்களும், எம்முடன் கைகோர்ப்பார்கள் என நாம் எதிர்பார்க்கிறோம். புதுப்பிக்கப்பட்ட எதிர்பார்ப்புடன், எதிர்காலத்தை நாம் வரவேற்பதனால், வருகின்ற காலங்களில் வளர்ச்சியை நோக்கி, புதிய கண்டுபிடிப்பு, சந்தை அபிவிருத்தி, நுகர்வோர் கையகப்படுத்தல், தொழிற்பாட்டு சிறப்புத் தேர்ச்சி என்பவற்றுக்கு முக்கியமான மூலோபாயங்களை நாம் பயன்படுத்துவோம்.

### பாராட்டுதல்கள்

இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்ட பாராட்டத்தக்க நிறைவேற்றுகை, ஹேலீஸ் குடும்பத்தின் பல்வேறுபட்ட துறைகளில் அர்ப்பணிப்பு மற்றும் கடமை உணர்ச்சியின் வெளிப்பாடாகும். சபை, என்னுடன் இணைந்து ஹேலீஸ் நிறுவனத்தை, இலங்கையில் முதலாவது கூட்டுறவு நிறுவனமாக நிலைநிறுத்த வழங்கிய ஒத்துழைப்புக்கு, பெறுமதிமிக்க அணிக்கு, நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஜுன் 2022 வரை இணைத் தலைவராகக் கடமையாற்றி, ராஜினாமா செய்த திரு. தம்மிக்க பெரேராவுக்கு என்னுடைய பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். திரு.பெரேராவின் தொலைநோக்கு மற்றும் பெறுமதிமிக்க ஆலோசனை, குழுமத்தின் தொடர்ச்சியான வெற்றிக்கு பிரதான காரணிகளாகும். அவருக்கு, அவருடைய எதிர்கால நடவடிக்கைகள் வெற்றி பெறவேண்டும் என வாழ்த்துகிறேன். மீளாய்வுக்கு உட்பட்ட இவ்வருடத்தில், சபையில் இருந்து ராஜினாமா செய்த கௌஷி அமரசிங்கவுக்கும் நன்றி தெரிவிக்க கடமைப்பட்டுள்ளேன்.

கடினமான இவ்வருடத்தைக் கடந்து வருவதற்கு உதவியளித்த, என்னுடைய சக சபை உறுப்பினர்களுக்கு நான் நன்றி தெரிவிக்கிறேன். இந்தப் பயணத்தில் எம்மோடு இணைந்து பயணித்த எமது பங்குதாரர்கள், வாடிக்கையாளர்கள், விநியோகத்தர்கள், வர்த்தக பங்குதாரர்கள் ஆகியோர் என்மீது கொண்ட நம்பிக்கையை நான் பாராட்டுகின்றேன்.

மொஹான் பண்டிதகே
தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி
2023 மே 19